
புதுச்சேரியைப் பாருங்கள்!



மணிமொழி நூல் நிலையம். புதுச்சேரி.

புதுச்சேரியைப் பாருங்கள்!

மன்னர் மன்னன்

—தொகுத்தது—

மணிமொழி நூல் நிலையம்
மாதாகோவில் தெரு, புதுச்சேரி

முதற் பதிப்பு: பிப்ரவரி 1958

விலை: 75 காசு



'மணிமொழி நூல்நிலையம்'

கமர்ஷியல் பிரிண்டிங் & பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை - 1.

முன்னுரை

வனப்பும் வளமும் வரலாற்றுப் பெருமையும் மிகுந்த புதுச்சேரியைப் பார்க்க வருவோர், நகரின் ஒரு சிறு பகுதியையோ, குறிப்பிட்ட ஒருவரையோ கண்டுவிட்டு, 'இதுவா புதுவை ?' என்ற கேள்வியை எழுப்பிச் செல்வதைப் பார்க்க நேரிட்டது.

சமீப காலத்தில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் புதுவை வந்து திரும்புகின்றனர்.

ஏமாற்றக் கண்ணோடு, ஏளனப் பார்வையோடு புதுவையைக் காணும் அன்பரை நோக்கி நாம் சொல்லுவோம்: நீங்கள் கண்டதும் கேட்டதும் மிகச் சிறிது! புதுச்சேரியைக் காணுமுன் அதன் வரலாற்றுப் பொன்னேடுகளைச் சிறிது புரட்டிப் பாருங்கள்! சுட்டிக்காட்ட இயலாத பொட்டலாக இருந்து, இன்று இந்தியத் துணைக் கண்டத்தினர் கவனத்தையும், உலக அரசியல் அரங்கினர் கவனத்தையும் தன்பால் இழுக்கும் ஆற்றலமைந்தது புதுச்சேரி! புதுச்சேரியில் உள்ள கலை விளக்கம் என்ன ? மாளிகைகளின் பழமையும் வரலாறும் யாவை? இன்றைய வளர்ச்சி நிலை எப்படி இருக்கிறது ? தமிழ் நாட்டின் அரசியல் வாழ்விலும், சமுதாயத்துறையிலும் புதுச்சேரி பெற்றுள்ள பங்கு என்ன ? இவற்றைப் பார்வையாளர்க்கு விளக்கிக்கூறி வழிகாட்ட எழுந்ததே இந்நூல்! இனி நீங்கள் "புதுச்சேரியைப் பாருங்கள் !"

—வெளியிடுவோர்

நன்றியுரை

புதுமுறையான இப்புத்தகம் வெளிவரப் பேருக்கம் தந்து தம் வாழ்த்துச் செய்தியை உதவிய புதுவையின் தலைமை ஆட்சியாளையர் (ஹைகமிஷனர்) அவர்கட்கு எம் நன்றி உரியது.

புதுவையின் வரலாற்று நூல்களையும், சான்றுகளையும் ஆழ்ந்து படித்துக் குறிப்பெடுக்க நூல்கள் அளித்தும், ஐயங்கட்கு விடையீந்தும் உதவிய திருவாளர் திருமுடி சேதுராமன் அவர்கட்கு எம் நன்றி!

புதுவையின் இன்றைய வளர்ச்சி நிலை விவரங்களை நமக்குக் கொடுத்து உதவிய மக்கள் தொடர்பு அதிகாரி அவர்கட்கு நன்றி!

விளம்பரங்கள் அளித்த வியாபாரிகட்கும், எழுத்து நிலையிலும், அச்சுவகையிலும் துணைபுரிந்த தோழர்கட்கும் எம் நன்றி!

—தொகுப்பாளர்

எங்கள் ஊரில்....

பூவிருக்கும்; தேனிருக்கும்; மணம்இ ருக்கும்
பொடியிருக்கும், வண்டுகள் பண்பா டிடும்பூங்
காவிருக்கும்; குளிர்இருக்கும்; தென்றல் வீசக்
கனன்றிருக்கும் வெளியனைத்தும் குளிர்ந்தி ருக்கும்
நாவிருக்கும் செந்தமிழோ டிசைஇ ருக்கும்
நவின்றிருக்கும் தொடர்மொழியிற் பொருள்செ றிந்த
பாவிருக்கும்! நெஞ்சிலெல்லாம் அன்பி ருக்கும்
பல்லோர்வாழ் எம்புதுவை நல்ல ஊரில்!

அலையிருக்கும் கடற்கரையில் அழகி ருக்கும்!
அடல்இருக்கும் தோள்மறவர் படைஇ ருக்கும்!
''இலை'', ''இருக்கும்'' எனஎண்ணு திருக்கும் வண்ணம்
எவரிடத்தும் இருக்கும்; அருள், ஈகை, வன்மை
தொலைஇருக்கும் அறிவான நிலையிற் சேர்க்கும்
துறைதோறும் நிறைமைவாய்ந் தோர் சூழ்ந்த
கலையிருக்கும் நிலையங்கள் பலஇ ருக்கும்
காட்சிதரும் எம்புதுவை மாட்சி ஊரில்!

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

(தாரண ஆண்டு சித்திரை மாதம் புதுவையில் வெளியான ''தமிழ்'' கையெழுத்து இதழில் வெளி வந்த கவிதை)

புதுச்சேரி ஹைகமிஷனரின்

வாழ்த்துச் செய்தி



"புதுச்சேரியைப் பாருங்கள்" என்ற இந்தப் புத்தகத்தை வெளியிடும் மணிமொழி நூல் நிலையத்தாரின் முயற்சியைக் கேட்டு நான் சந்தோஷம் அடைகிறேன்.

இந்தப் புத்தகத்தின் பொருளடக்கத்திலிருந்து இது புதுச்சேரியைப் பார்க்க வரும் யாத்ரீகர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

17-12-1957 (ஒப்பம்) எம். கே. கிருபலானி

பிரதம கமிஷனர், புதுச்சேரி

புதுச்சேரி ராஜ்யம்

ராஜ்யத்தின் மொத்தப் பரப்பு: 196 சதுர மைல்கள்.
மொத்த மக்கள் தொகை 1948 கணக்கின்படி: 3,17,163.
ரயில் பாதை நீளம்: 22 மைல்கள்
சாலை நீளம்: 190¼ மைல்கள்.

நான்கு பெரும் பிரிவுகளாக அமைந்துள்ள ராஜ்யம் புதுச்சேரியைத் தலைநகராகக் கொண்டது. புதுச்சேரி, வங்காளக்குடா (சோழ மண்டலக்) கரையில் அமைந்திருக்கிறது. புதுச்சேரி, முதலியார் பேட்டை, வில்லியனூர், உழவர்கரை, அரியாங்குப்பம், நெட்டப்பாக்கம், பாகூர், திருபுவனை ஆகிய எட்டு 'கொம்முய்ன்' சிறு பிரிவுகள், தனி முனிசிபல் அங்கங்களாக இயங்குகின்றன.

சோழ மண்டலக் கரையில் அமைந்துள்ள இரண்டாவது பெரும் பிரிவு காரைக்கால். ஆறு கொம்முய்ன்கள் அடங்கியது.

மாஹே - மலபார் கரையிலும், ஏனம் ஆந்திரக் கரையிலும் அமைந்துள்ளன.

'சந்திரநாகூர்' எனும் ஐந்தாவது பிரிவு கல்கத்தாவிலிருந்து சில மைல் தொலைவில் உள்ளது. 1951ஆம் ஆண்டு இந்தியாவுடன் நடைமுறையில் இணைந்து, 11-4-52ல் பிரஞ்சு அசம்பிளி ஒப்புதல் தீர்மானப்படி சட்ட பூர்வமாகக் கலந்து விட்டது. இந்திய அரசாங்கத்தில் இணைந்த முதல் பிரஞ்சிந்தியப் பகுதி இதுவே!

புதுச்சேரி

சென்னை ராஜ்யத்தின், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது. 115 சதுரமைல் பரப்பும், 222,407 மக்கள்

தொகையும் கொண்டது. சென்னையிலிருந்து ரயில் வழியில் 122 மைலில் இருக்கிறது. சாலை வழியாக மரக்காணம் பாதையில் சென்றால் 89 மைல்கள். திண்டிவனம் பெருஞ் சாலை வழியில் சென்றால் 110 மைல்கள்,

புதுச்சேரி வட்டாரம், செஞ்சியாறு, அரியாங்குப்பம் ஆறு, சுண்ணாம்பாறு, பம்பையாறு, குடுவையாறு, பெண்ணையாறு, மலட்டாறு, உப்பாறு ஆகிய எட்டு சிற்றாறுகள் சூழ்ந்தது. எண்ணற்ற குழாய்க் கிணறுகளும், ஐம்பது ஏரிகளும் கொண்டுள்ளது.

புதுச்சேரி நகரம் ஏறத்தாழ எண்கோண வடிவமாக இருக்கிறது. சுமார் 30 தெருக்கள், கிழக்கு மேற்காகவும். தெற்கு வடக்காகப் பெருவீதிகளும் கொண்டது. இவ் வீதிகள் ஒரே சீராக ஒன்றையொன்று பின்னித் தொடர்பு கொள்ளும் அழகு வியப்புக்குரியது. நகரை, வெள்ளையர் நகரம் எனவும், கறுப்பர் நகரம் எனவும் இரு கூறாக்கிச் சென்ற செஞ்சிச்சாலை வாய்க்கால் இப்போது கழிவுநீர் கொண்டு சென்று கடலில் கலக்கிறது.

புதுச்சேரியிலிருந்து 14 மைல் தொலைவில் உள்ள கடலூருக்குக் காலை 4 மணிமுதல் இரவு 8-30 மணிவரை எண்ணற்ற பஸ்கள் செல்கின்றன. திண்டிவனம் வழி வாகச் சென்னை செல்லும் பாதையில் பஸ் வசதி உண்டு.

காலை இரண்டும் மாலை இரண்டுமாக பஸ் நான்கு சென்னைக்கு மரக்காணம், சூனம்பேடு, மதுராந்தகம் வழியாகப் போகின்றன.

புதுச்சேரியில் காலை 8 மணிக்கும், பிற்பகல் 2-15 மணிக்கும், இரவு 8-35க்கும் ரயில்கள் விழுப்புரம் சந்திப் புக்குச் சென்று திரும்புகின்றன.

இரவு ரயிலில் சென்னையிலிருந்து நேர்ப்பெட்டி ஒன்று இணைத்துப் புதுவையடைகிறது.

புதுவையிலிருந்து சென்னைக்கு நேர்ப்பெட்டி ஒன்று இணைக்கப்படுகிறது.

புதுச்சேரியில் அதிக வசதியுள்ள, குறைந்த கட்டண முள்ள ஒரே வாகனம் ரிக்ஷா ஆகும். டாக்சிகள் சில உள்ளன. புதுவை – கடலூர் பாதையின் சந்திப்பில் இரண்டு பெட்ரோல் பங்குகளும், ஒதியஞ்சாலைத் திடலின் தென்புறத்தில், புசி வீதியில் கால்டெக்ஸ் பெட்ரோல் பம்பு ஒன்றும், துய்ப்ளேக்சு தெருவில் ஒன்றும் உள்ளன.

பஸ் நிலையம் ஒதியஞ்சாலைப் பகுதியில் உள்ளது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தொலை வில், தென்மேற்கில் இது அமைந்திருக்கிறது.

முக்கிய டெலிபோன் எண்கள்: தீயணைப்பு-64. போலீஸ் உதவி, ஆம்புலன்ஸ்-64. ரயில்வே ஸ்டேஷன்: 84. மின் சார இலாகா: 4.

தபால் நிலையங்கள்: கவர்னர் மாளிகை அருகில், ரங்கப்பிள்ளைத் தெரு முடிவில் உள்ளது தலைமைத் தபால் அலுவலகம். இதனுள் டெலிபோன் எக்ஸ்சேஞ்சு, தந்தி நிலையங்களும் உள்ளன.

துய்ப்ளேக்சு தெருவில், கடைத் தெரு அஞ்சல் அலுவலகமும், ரயில்வே ஸ்டேஷன் கிளை நிலையம் புசி தெருவிலும், ஒதியஞ்சாலைக் கிளை நிலையமும், ஈசுவரன் கோயில் தெரு கிளை நிலையமும் உள்ளன.

புதுச்சேரி தலைமைப் போலீஸ் அலுவலகம் கடற் கரையிலும், ஒதியஞ்சாலையில் போலீஸ் நிலையம் ஒன்றும் கடைத் தெரு நிலையம் ஒன்றும் உள்ளன.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நேராக வடக்கே செல் லும் பாதை நகரக் கடைவீதி வழியாக முத்தியால் பேட்டை செல்கிறது. இதுவே மரக்காணம் வழியாக சென்னை வரை நீள்கிறது.

உத்தியோகத் தொடர்புடையவர்கள் தங்கும் விடுதி யொன்று கடற்கரையின் தெற்குக்கோடித் திருப்பத்தில் உள்ளது.

காரைக்கால்

சென்னை ராஜ்யத்தின் தஞ்சை மாவட்டத்தில் புதுச் சேரியிலிருந்து 90வது மைலில் தரங்கம்பாடிக்கும் நாகூருக் கும் இடையில் உள்ளது. பேரளம்–காரைக்கால் கிளைப் பாதை ரயில் வழியாகக் கொண்டது. 110 சிற்றூர்களுடன் 53 சதுரமைல் பரப்பும், 70,541 மக்கள் தொகையும் உள்ளது. பஸ் தொடர்பு மிக உண்டு.

காரைக்கால் நகரம் சிறிது எனினும் அழகும் வளமும் உடையது. நகரில் காரைக்கால் அம்மையார் கோயிலும், திருநள்ளாற்றில் சனிப் பெயர்ச்சி விழாவும், மற்றும் தல வரலாற்றுப் பெருமையும் தமிழுலகம் அறிந்ததாகும். காவிரியின் செழுமை பூண்ட தஞ்சையின் வளம் காரைக் காலிலும் கமழ்கிறது!

மாஹே

சென்னை ராஜ்யத்தின் மேற்குக் கரையில். மாஹே எனும் பெயருள்ள ஆற்றின் இடது கரையில் அமைந் துள்ள மலையாளப் பகுதி இது! கேரள ராஜ்யத்தின் கண்ணனூர் மாவட்டத்தினுள் அமைந்திருக்கிறது.

பரப்பு : 26 சதுர மைல்கள். மக்கள் தொகை: 18293.

ஏனம்

ஆந்திர ராஜ்யத்தின் கிழக்குக் கோதாவரி மாவட்டத் துள் அடங்கிய 5 சதுரமைல் பரப்புள்ளது. மக்கள் தொகை; 5853.

கி.பி. 60ம் ஆண்டு

மூன்று பக்கங்களிலும் முத்துக் கொழிக்கும் கடலாலும், அகிலும் தேக்கும் மிளகும் சந்தனமும் விளையும் மலை வளத்தாலும் சூழப்பட்ட தமிழ் நாட்டையும் அதன் வட பகுதி நாடுகளையும் நாவலந்தீவு எனும் பொதுப் பெயராலும், இந்தியா எனும் வரலாற்றுக் குறிப்புப் பெயராலும் அறிந்த மேனாட்டார், தங்கள் தங்கள் கடற் பயணத்தை நடத்தி, இங்கு வந்து, இவ் வளத்தையெல்லாம் தம் நாட்டுக்குக் கொண்டு சேர்க்க எண்ணினர். கி. பி. அறுபதாம் ஆண்டிலேயே அவர்கள் இதுபற்றிக் கருத்தூன்றித் தம் நாவாயைச் செலுத்தத் தொடங்கினர். நிலைமை வளர்ந்தது. காலமும் கடிது ஓடிற்று.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் நம் தமிழ்நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்த தாலமி என்ற வரலாற்றுப் பேராசிரியன் நாட்டு வளத்தையும் சேர சோழ பாண்டிய மன்னரின் ஆட்சிச் சிறப்பையும் கண்டு வியந்து எழுதியுள்ளான். சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்க் காப்பியத்தில், மதுரைக் காண்டம்—யவனரும், உரோமரும், கிரேக்கரும் இங்கே பண்டமாற்று வாணிபம் செய்ததை நமக்கு எடுத்துச் சொல்கிறது. மதுரைக்கும் காவிரிப்பூம் பட்டினத்துக்கும் அடுத்தபடியாக ''புதுக்கே'' என்ற பகுதியில் உரோமரால் நடத்தப்பட்ட தொழிற்சாலை ஒன்று இருந்தது எனவும் தாலமி குறிக்கிறார்.

அத்தகு வாணிபப் பெருநகராம் 'புதுக்கே' நமக்கு இன்று புதுச்சேரியாகக் காட்சியின்பம் தந்து கொண்டிருக்கிறது!

இலக்கியக் குறிப்புகள் மட்டுமல்ல—புதுச்சேரியில் கிடைத்த சிலைகள், தொன்மையான நாணயங்கள், கோயில் கல்வெட்டுகள் இந்த முடிவை உறுதிப்படுத்துகின்றன. தாலமியின் கருத்தைக் கொண்டும் ஆதாரக் குறிப்பைக் கொண்டும் தமிழக அறிவாளர்களும், புதுவையில் நீண்ட காலம் இருந்த ஆராய்ச்சித் துறை அறிஞர் துய்ப்ரேய் போன்றாரும் இதையே எழுதியுள்ளனர்.

பல வகையிலும் பெருமையுடைய புதுச்சேரி, அழகு மிக்கது. அருங் கலைகள் வாய்ந்தது. வரலாற்றுக்கூடங்கள் மிகவுண்டு. அரசியல் புரட்சியாளர்க்கு அடைக்கலம் தந்திருக்கிறது. யோகியர்க்கு அமைதிகாட்டும் புதுவை தீவிரப் புரட்சிக்காரரர்க்குப் பாசறையாக விளங்கியது.

நன்னம்பிக்கை முனை

பெயருக்கேற்ப, இத்திருப்பு முனை மேனாட்டுக் கடற் பயணக்காரருக்குப் பெரியதோர் நம்பிக்கையூட்டி வந்தது. அவ்வாறு, இந்தியாவின் தெற்குப் பகுதிக்கு நன்னம்பிக்கை முனை வழியாக 1521–ஆம் ஆண்டு சில போர்த்துகீசியர் வந்தனர். தொடக்கநிலை மிகவும் மெல்லச் சென்றது. கடற்படை வல்லரசுகளாகத் திகழ்ந்த ஹாலந்து, இங்கிலாந்து, பிரான்சு நாட்டினரும் சிறிது காலத்தில் இடம் பிடிக்கும் முயற்சியில் இறங்கினர்.

மாமன்னர்களின் ஆட்சியும், தங்கக் கனிகளும், பன்மணிக் குவியல்களும் நிறைந்த கனவு உலகாக அவர்கட்குக் காட்சி தந்தது நாவலந்திவு!

பிரான்சு நாட்டினர் இக் கனவு உலகைக் காண விரைந்தனர். 15-வது நூற்றாண்டில் கடற்படை வலிமை மிக்க பிரான்சு, 1503-வது ஆண்டில் பன்னிரண்டாம் லூயி மன்னனின் காலத்தில் இரு கப்பல்களை அனுப்பி வைத்தது.

12-வது லூயிக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற பிரான்சிஸ் அரசன், 1537, 1543 ஆண்டுகளில் நீண்ட கடற்பயணம் மேற்கொள்ள ஆணையிட்டான்.

பதின்மூன்றும் லூயி காலத்தில், ரிஷிலியே என்ற அமைச்சன் போர்ச்சுகல் வசம் இருந்த மடகாஸ்கர் வழியாக பிரஞ்சு—இந்தியக் கம்பெனி நிருவாகத்தின் சார்பில் கப்பல்களை அனுப்பிவைத்தான்.

பதிநான்காம் லூயிக்கு அமைச்சராக வந்த கொல்பேர் வணிகர் மகன். பரம்பரையை ஒட்டி வியாபாரத்தை விரிவுபடுத்த இந்தியாவை இலக்காகக் கொண்டான். இம் முயற்சிகளை ஆழக் கடல்களும் புயற்காற்றும் முறியடித்தன போலும்!

பிரஞ்சுக்காரர் வருகை

இயற்கையின் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றிகாண 16-வது நூற்றுண்டின் பிற்பகுதியில் 7—3—1665-ல் நான்கு கப்பல்கள் பிரான்சைவிட்டுப் புறப்பட்டன. மதகாஸ்கர் வழியாக, 'பிரான்சிஸ் கரோன்' தலைமையில் 4—12—1667-ல் கொச்சியை அடைந்தன. பின் சூரத் போய்ச் சேர்ந்தன. பிரான்சிஸ் கரோன் இந்தோ—பிரான்ஸ் வியாபாரக் கம்பெனி டைரக்டர் ஜனரலாக நியமிக்கப்பட்டான். முதல் பிரஞ்சு வாணிப நிலையம் தோன்றியது. அட்மிரல் லஹாய் வந்தான். இவனைத் தொடர்ந்து பிரான்சுவா மர்த்தேன் வந்தான்.

சூரத் நிலையம் ஒன்றுமட்டும் போதாது என்று கொள்ளிடத்தின் வடக்கே ஒரு பகுதியையும் டச்சுக்காரரின் அனுமதி பெற்று வாங்கிய பிரான்சுவா மர்த்தேன், விடா முயற்சியுடையவன். 1674 ஆண்டு ஏப்ரல் மாதம் 'விழிலாந்' என்ற பெயருடைய கப்பலில் அறுபது வீரருடன் தற்காப்புக்கும் வியாபாரத்துக்கும் உரிய இடம் ஒன்றை

எந்த விலை கொடுத்தேனும் வாங்கிவிடும் எண்ணத்தில் புறப்பட்டான்—இதே சமயத்தில்,

தென்னாட்டின் பகுதியில் ஆட்சிபுரிந்த ஷெர்கான் லோடி பணத்தட்டுப்பாட்டில் திணறிக்கொண்டிருந்தான்.


பிரான்சுவா மர்த்தேன், செஞ்சியாறு கடலோடு கலக்கும் இடமான புதுச்சேரியைச் சார்ந்த கிரைப்பாளையம் பகுதியை அடைந்தான். பல நூற்றாண்டுகட்கு முன்பே வாணிபச் சிறப்புடைய இந்த இடம் மர்த்தேனுக்கு ஏற்ற இடமாத் தோன்றியதில் வியப்பில்லையன்றோ?

புதுச்சேரி உருவாயிற்று!

'புதுக்கே' மர்த்தேனுக்குக் கனவு உலகின் கரையாகக் காட்சியளித்தது. சில ஆயிரம் பகோடா நாணயங்கள் மர்த்தேன் கையிலிருந்து ஷெர்கான் லோடிக்குப் போய்ச் சேர்ந்தன.

'பில்சேரு' என்ற புதுப் பெயரில் மர்த்தேன் தற்காப்பு அரண் அமைத்துச் செப்பனிடத் தொடங்கிவிட்டான். 1674-ல் இருந்த இக்காட்சி இடையில் ஹாலந்துக்காரர் படையெடுப்பால் குழப்பமாகியது. பிறகு ஹாலந்து நாட்டினருக்கும் பிரான்சுக்கும் 21—9—1697-ல் ஏற்பட்ட ரிஸ்விக் ஒப்பந்தப்படி 16 ஆயிரம் பகோடா ஹாலந்துக்காரர் பெற்றுக்கொண்டு பிரான்சுவா மர்த்தேனிடம் புதுச்சேரியை ஒப்படைத்தனர். பாதுகாப்புக் குறைவால் ஏற்பட்ட கலவரத்தை நன்கு உணர்ந்த மர்த்தேன் ஒரே ஆண்டில் அரண்களை வலுப்படுத்தித் தீர்த்தான். அப்போது புதுச்சேரி நாற்பதாயிரம் மக்கள் வாழும் நகரமாகத் திகழலாயிற்று. வளர்ச்சிப் பாதையில் முன்னேறிய புதுச்சேரியில் மர்த்தேன் முயற்சியால் 1700-ல் தொடங்கப்பட்ட சுரங்கக் கோட்டை செயிண்ட் லூயி கோட்டை

யாக 1706-ல் கட்டி முடிக்கப்பட்டது. ஆட்சிப் பணிமனை கட்டியானபோது, வரம்பு மீறிய செயல் என ஹாலந்துக்காரர் பேராசை எண்ணத்தில் வழக்காடலாயினர். போர் நிலைமையைத் தவிர்க்க ரூ. 10,000 பெறுமான தொகையை ஈடு கொடுத்தான் மர்த்தேன். இந்த முதல் வெற்றியைமுழுதாக்கிப் பிரான்சுக்கு மகிழ்ச்சிப் பெருக்கை அளித்த மர்த்தேன் புதியதொரு ஊரை—தக்க நினைவுச் சின்னமாக ஏற்படுத்தி விட்டு 1706-ல் மறைந்தான். அழகிய தெருக்களும் மாளிகைகளும் அரணும் கொண்ட புதுச்சேரியின் மக்கள் மர்த்தேன் பிணத்தைப் பிரான்சுக்கு அனுப்பி வைத்தனர்,



செயின்ட் லூயி கோட்டை

1728-ல் துய்மா எனும் கவர்னரால் புதுப்பிக்கப்பட்ட அரண் பின்னர் 1745.ல் துய்ப்ளேக்ஸ் காலத்தில்தான் முடிவு பெற்றது.

முதல் "வெற்றி வீர"னை அடுத்துப் புதுச்சேரிப் பகுதியில் குறிப்பிடத்தக்கது எதுவுமின்றி, புதிதாக வங்காளத்தில் சந்திரநாகூர் பகுதியில் அமைப்பு வேலைகள் துவக்கப்பட்டன.

துய்ப்ளேக்ஸ் வந்தான்!


'துய்ப்ளேக்சு' என்பானின் நிருவாகம் அங்கே நிலவியது. அரசியல் நுணுக்கமிக்க துய்ப்ளேக்சு சிலகாலம்

சந்திரநாகூரில் இருந்தான். மிகப் பெரிய சாதனைகளை அங்கே முடித்தான்.

இதற்காக அவனைப் பாராட்டி புதுச்சேரி கவர்னராக்கியது பிரான்ஸ். 15—1—1742-ல் புதுவை வந்து கவர்னராகப் பதவியேற்றான்.

இவனே புதுச்சேரி நிலைபெற்று முழுமைபெற அரும்பாடு பட்டவன் என வரலாற்று ஆசிரியர்கள் மதிப்பிடுகின்றனர்.

வங்காளத்தில் சந்திரநாகூர் நிருவாகியாகத் தூய்ப்ளேக்சு பணியாற்றியபோது டெல்லியிலிருந்து முகலாயப் பேரரசனிடம் நாணயம் அச்சிடும் உரிமை பெற்றுக் கொண்டபோது, 'பேக்டர்-நவாப்' எனும் விருதும் அவனுக்குக் கிடைத்தது. இந்த அதிகாரமும் பட்டமும் மற்ற நவாபுகட்கு எரிச்சல் தரும் விஷயமாகப் பரவலாயிற்று-புதுவையில் உள்ள அரசியல் ஆட்சித் தலைவனுக்கே இவ்விருது அளிக்கப்பட வேண்டும் என அவர்கள் வாதாட முனைந்தபோது அதனை ஏற்று, தூய்ப்ளேக்ஸ் புதுவை கவர்னராகி விட்டான். இப்பட்டமும் பதவியும் புதுவையிலேயே ஆர்க்காட்டு நாணயம் அச்சிடும் உரிமையும் தூய்ப்ளேக்சின் அரசியல் அரங்கத்தில் காய்களாகி விட்டன. ஒரு பக்கம் 'லில்லி' மலரும் மறுபக்கம் புதுச்சேரி என்ற தமிழ்ச் சொல்லும் பதித்த காசு புழக்கத்துக்கு வரலாயிற்று-மற்றொரு முக்கிய நிகழ்ச்சியும் நடந்தது. புதுவைக்கு வந்து சேர்ந்த ஆண்டின் முடிவில், அரசாங்க ஆலோசகர் ஒருவரின் விதவையாகி விட்ட வின்சான் எனும் மாதை தூய்ப்ளேக்சு மணந்து கொண்டான். பிரஞ்சுக்காரனுக்கும் போர்ச்சுகல் தாய்க்கும் பிறந்தவள் இவள். சிந்தனை சக்தியும் அரசியல் கண்ணோட்டமும் உள்ளவள். உள்நாட்டு மொழிகள் அறிந்தவள். இவளே பின்னால் தூய்ப்ளேக்சின் அரசியல் துணையாகி, ஜரினா பேகம் என்ற சிறப்புப் பெயர் பெற்றாள்.



புதுச்சேரி வரலாற்றில் பெரும்
பங்கு கொண்ட துய்ப்ளேக்ஸ்

பரப்பளவை அதிகப்படுத்துவதை நிதானித்துவிட்டு, அரசியல் செல்வாக்கை விரிவுபடுத்துவதையே தூய்ப்ளேக்ஸ் விரும்பினுன்.

சென்னையில் பிரஞ்சு ஆட்சி

21 செப்டம்பர் 1746-ல் சென்னை பிரஞ்சுப் படை வசமாயிற்று. தளபதி லபூர்தொனே நிருவாகம் ஏற்ருன். இந்த வெற்றியை தூய்ப்ளேக்ஸ் பயன்படுத்த நினைத்த முறை புதுமையானது! தனக்கு ஆதரவாக இருக்கும் ஆர்க்காட்டு நவாபுக்குச் சென்னையை ஒப்படைத்துவிட்டு, தென்னுட்டு அரச வம்ச உரிமைச் செல்வாக்கைத் தனக்கு ஏற்படுத்திக் கொள்ள நினைத்தான். ஆனுல் தளபதி லபூர்தொனே சென்னையை நிர்மூலப்படுத்தும் வெறி கொண்டான். ஆயினும் இவ்விருவரும் பொது எதிரியான ஆங்கிலேயரை சோழமண்டலக் கரையிலிருந்து விரட்டி அடிக்கவே முயன்றனர்' ஆனுல் முரண்பட்ட நிலை வளர்ந்து, பராதி எனும் தளபதியும் இறந்த சமயம், ஆங்கிலேயர் 6 செப்டம்பர் 1748-ல் புதுவையைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். ஆயின் தளரா முயற்சி கொண்டு, தூய்ப்ளேக்ஸ் அரியாங்குப்பம் பகுதியிலிருந்து தாக்கி, பெரும் போராட்டத்தின் முடிவில் 17 அக்டோபர் 1748-ல் ஆங்கிலேயரை விரட்டியடித்து, தங்கியிருந்த கப்பல்களை நிர்மூலமாக்கினுன். விரட்டி அடிக்கப்பட்ட ஆங்கிலேயர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள கூடலூரில் சென்று பதுங்கினர்—அங்கு சென்றும் தாக்க முனைந்தான் தூய்ப்ளேக்ஸ்—பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரான்சும் 1749-ல் செய்த எக்ஸ்-லா-ஷப்பேல் உடன்படிக்கையின்படி சமாதானம் ஏற்பட்டு, சென்னை மீண்டும் ஆங்கிலேயருக்குத் தரப்பட்டது.

செஞ்சி வெற்றி

இவ்வாறு வெற்றி பெற்ற தூய்ப்ளேக்ஸ், தளபதி புசி தலைமையில் 3 செப்டம்பர் 1750-ல் செஞ்சியைத் தாக்கி

ஞன். மிகச் சிறிய பிரஞ்சுப் படையே ஆயினும் நிரு வாகத் திறமையால் செஞ்சி அடிபணியச் செய்தனர்.

இது தூய்ப்ளேக்ஸ் அடைந்த வெற்றிச் சிகரம் என லாம். அண்டைப் பகுதி அரசர்கள் நடுங்க ஆரம்பித்த னர், தூய்ப்ளேக்ஸ் ஆதரவு பெற்ற சந்தா சாயபு பெரு மகிழ்ச்சி கொண்டான். இதனைச் சொல்லும்போது- சுமார் 76 ஆண்டுகட்கு முன் 60 வீரர்களுடன் வந்திறங்கி உருவாக்கிய நிலையை, அந்தச் சிறு பகுதியின் தலைவன் தூய்ப்ளேக்ஸ் செல்வாக்கு பெற்று, ஏனைய பகுதி வாழும் 35 லட்சம் மக்கட்கு சட்டம் வகுக்கும் பேராற்றல் பெற் றதை ஒப்பிட்டு வியக்கின்றனர் சரித்திர ஆசிரியர்கள். மேனாட்டினர் பலரையும், முஸ்லீம் அரசரையும் தோற் கடித்து, உள்நாட்டுப் பேரரசருள் ஒருவனாகப் பிரஞ்சுக் காரன் தூய்ப்ளேக்ஸ் விளங்க முடிந்தது அவனது அரசி யல் அறிவைக் காட்டும்.

வெற்றி வீரன் தூய்ப்ளேக்ஸ்!

முகலாய சாம்ராஜ்யத்தின் தக்காணப் பிரதிநிதி முசாபர்ஜங் புதுவைக்கு வந்து தர்பார் நடத்தி தூய்ப் ளேக்சுக்குப் பாராட்டு அளித்தான். கிருஷ்ணா நதிக்குத் தெற்கே மைசூர் உள்ளிட்ட கன்னியாகுமரி எல்லைவரை நவாப் ஆக தூய்ப்ளேக்சுக்கு உரிமை தரப்பட்டது. புதுச் சேரியிலிருந்து 9 மைலில் உள்ள வழுதாவூர்க் கோட்டை அன்பளிப்பும், ஆண்டுக்கு லட்ச ரூபாய் ஜாகிரும் கொடுத் தான் முசாபர். சந்தா சாயபுக்குப் பெரும் பகுதியை தூய்ப்ளேக்ஸ் ஒப்படைத்து விட்டு காரைக்கால் முதலிய இடங்கட்குச் சென்று தனதாக்கி வந்தான். இந்த வெற் றிக்கறிகுறியாக "தூய்ப்ளேக்ஸ்-பத்தே-அபாத்" என்ற ஊர் நிர்மாணித்து நினைவுச் சின்னம் ஒன்றைப் புதுச் சேரிக்கு 36 மைலில், விழுப்புரம்-வந்தவாசி பாதையில் அமைத்தான்.

கி. பி, 1751-ல் சந்தா சாயபின் எதிரி முகமது அலி தூய்ப்ளேக்சுக்கு அடிபணிந்தான். இந்தியாவின் சரிபாதியில் அரசியல் செவ்வாக்கு பெற்று ஈடு இணையற்று விளங்கினன் தூய்ப்ளேக்ஸ். என்ருலும், புதுச்சேரி ஆட்சி எல்லையைப் பரப்ப முனையவில்லை.

தூய்ப்ளேக்ஸ் தோல்விப் படலம்

தோற்ற முகமது அலிக்கு உதவிபுரிந்து புதுமுறைப் போர் நடத்த ஆங்கிலேயர் முனையலாயினர். இதில் லெப்டினன்ட் கிளைவ் தளபதியானுன். காவிரிக் கரையிலும் கொள்ளிடக் கரையிலும் போர் மூண்டது. ஸ்ரீரங்கம் பலதடவை கைமாறியது 'பிரஞ்சு ராக்' என்ற பெயரில் குன்று ஒன்றுக்குப் பெயரும் வழங்கலாயிற்று.

கிளைவ் தோன்றிய பின் இந்த வரலாற்றில் தூய்ப்ளேக்சின் தோல்வியையே பார்க்க முடிகிறது. ஊழல் காரணமாகவும், பரந்த சாம்ராஜ்ய நடவடிக்கையால் உள்ளூர் நிருவாகக் குழப்பம் காரணமாகவும் தூய்ப்ளேக்ஸ் மனமுடைந்தான். பின், 14 அக்டோபர் 1754-ல் பிரான்சுக்குப் பயணமானுன். அங்கே மேம்போக்கான விசாரணைக்குப் பின் ஏறத்தாழ கொடிய வறுமையில் தன் இறுதிக் காலத்தைக் கடத்தி 10-11-1764-ல் இறந்தான்.

இவ்வாறு ஆட்சி எல்லைக்கப்பால் நடந்த போர்களில், முதலில் வெற்றி பெற்றனர் எனினும் முடிவு பிரஞ்சுக்காரருக்குத் தோல்வியைத் தந்தது. வெற்றி பெற்ற கிளைவ், காஞ்சி, வேலூர், ஆர்க்காடு வழியாகச் சென்னை வரும்போது 'தூய்ப்ளேக்ஸ் பத்தே அபாத்'தைத் தூள் தூளாக்கி விட்டுச் செல்கிருன். இவ்வாறு ஸ்ரீகாகுளம், ராஜமகேந்திரபுரம் பகுதிகளில் வெற்றியும், பின் தோல்வியும் பிரஞ்சுக்காருக்கு ஏற்பட, 28-4-1758-ல் புதுச்சேரி கவர்னராக லல்லி தொல்லாந்தால் நியமனம், தளபதியான இவன் சுற்றுப் பயணம் கிளம்பிப் போய்விட்ட சம

யம், புதுச்சேரி ஆங்கிலேயரால் தாக்கப்பட்டு, வந்த வாசிப் போரில் பிரஞ்சுக்காரர் தோல்வியில் முடிகிறது. தூய்ப்ளேக்ஸ் தோல்விக்குப் பின், 15-1-1761-ல் புதுச்சேரி ஆங்கிலேயர் வசமாயிற்று.

இருள்!

அப்போது பிரான்சில் ஆட்சிபுரிந்த லூயி-15, கையாண்ட முறைகளாலும், புதுச்சேரி ஆட்சியில் ஏற்பட்ட குழப்பங்களாலும் புதுச்சேரியின் எல்லை குறுகிவிடலாயிற்று.

இந்த நிலைக்குப் பின் குறிப்பிடத்தக்க செல்வாக்கான நிலை புதுவைக்கு ஏற்பட வாய்ப்பில்லை என்றே கூறலாம். எனவே அடுத்துவரும் வரலாற்று நிகழ்ச்சிகளைச் சில வரிகளால் உணர்த்து முன், பிரபல பிரஞ்சு இந்திய வரலாற்று ஆசிரியன் கலோனேல் G. B. மல்லிசன் C. S. I. கூறுவதை இங்கு குறிப்பிடுவோம். " தூய்ப்ளேக்ஸ்தான் பிரஞ்சிந்தியாவை உருவாக்கினுன். ஆயின் பிரான்சுதான் அதனைக் கைநழுவ விட்டுவிட்டது"

புதுச்சேரி அவல நிலை

13-2-1761-மாஹே ஆங்கிலேயர் வசமான பின், 5-4-1761ல் செஞ்சியும் வீழ்ந்தது. பாரீஸ் உடன்படிக்கை 1763-ல் நிகழ்ந்தபோது பிரஞ்சுக்காரரிடம் ஒப்படைக்கப் பட்ட புதுச்சேரி 1778-ல் பிரான்சு-இங்கிலாந்து போரின் போது மீண்டும் ஆங்கிலேயர் வசமாயிற்று. இதுபோல, 1783-முதல் 1803 வரையில் பல தடவை மாறி மாறி, 1814-15-ல் இறுதியாகப் பிரஞ்சு நிர்வாகத்துக்கு வந்தது.

இவ்வாறு புதுச்சேரி நிருவாக அமைப்பு ஏற்பட்டும், அதன்பின் வளர்ச்சிகள் பற்றியும் சில குறிப்புக்கள் தருவோம்.

14 மார்ச் 1790ல் அசம்பிளி செயல் கமிட்டி கூடி பிரதிநிதி சபை ஏற்படுத்துகிறது. 53 உறுப்பினர்களும், 14 உதவியாளர்களும் கொண்ட குழுவாகும். இக்குழு பிரான்சு நாட்டுப் பிரதிநிதி சபையுடன் தொடர்பு கொள்ளும் அதிகாரத்தை ஏற்படுத்திற்று.

7 மே 1751ல் இப்போத்தேக்பீரோ என்னும் பதிவு அலுவலகம் ஏற்பட்டது,

5 ஜுலை 1791ல் அசம்பிளி கொலானியால் என்ற சபை ஏற்பட்டது. அதன் உறுப்பினர்கள் புதுச்சேரிக்கு 15 பேர்களும், சந்திரநாகூருக்கு 6 பேர்களும், மாஹே-ஏனத்திற்கு 8 பேர்களும் ஆவார்கள்,

3 ஏப்ரல் 1793ல் தேசியப் பாதுகாப்பு .(போலீஸ்) நிறுவனம் நிறுவப்பட்டது.

13 மே 1816ல் பிரஞ்சுப் பகுதியில் உப்புக் காய்ச்சும் தொழில் நிறுத்தப்பட்டது. அவ்வுரிமையை ஆங்கிலேயர்கள் 4000 பகோடா ஆண்டொன்றுக்கு நஷ்டஈடு கொடுத்துப் பெற்றனர்.

4 நவம்பர் 1823 சுகாதாரக் கவுன்சில் ஏற்படுத்தப் பட்டது.

7 ஜுலை 1826ல் புதுச்சேரி வழக்கறிஞர்கள் வழக்காடும் உரிமை பெற்றனர்.

1 பிப்ரவரி 1827ல் எல்லா மதத்தினரும் பிரஞ்சு, தமிழ் கற்கும் இலவச கல்வி வழங்கப்பட்டது.

1 மே 1827ல் **Mont de Piete** என்னும் எளிய வட்டிக் கடன் தரும் பாங்கி ஏற்படுத்தப்பட்டது.

21 ஆகஸ்ட் 1827ல் ஒரு பார்ப்பனப் புரோகிதன், ஒரு வள்ளுவன், ஒரு முல்லா இவர்களால் நீதிமன்றங்களில் சத்தியப் பிரமாணம் செய்விக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

6 ஜூலை 1827ல் வெள்ளையர் பகுதி – கறுப்பர் பகுதி எனப் பிரித்து அதற்கு எல்லையாக செஞ்சிசாலை வாய்க்காலை இரு திசைகளிலும் நீட்டப்பட்டது.

30 அக்டோபர் 1827ல் உள்நாட்டு மக்களின் கலை, ஒழுக்கம், பண்பாடு. சட்டதிட்டங்களை யறிந்து நியாயம் வழங்கும் பொருட்டு ஆலோசனைக் குழு நியமனம்.

16 டிசம்பர் 1827ல் நீதிமன்றத்தில் பப்ளிக்பிராசிக்யூட்டர், அட்வகேட் ஜெனரல், எழுத்தாளர்கள் முதலியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

19 ஜூலை 1828ல், 1817ல் நிறுவப்பட்ட சிறிய அரசாங்க அச்சகம் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டது.

21 ஜூலை 1828ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச பள்ளி ஏற்படுத்தப்பட்டது.

1837ல் வெள்ளி, பித்தளை, கோழிக் காசுகள் புதுச்சேரியில் அச்சடிக்கப்பட்டன.

5 ஜூன் 1838ல் புதுச்சேரியிலுள்ள மாணவர்களுக்குச் சட்டப் படிப்புத் தருமாறு பப்ளிக்பிராசிகியூட்டர் எமேன்தெலானுவுக்கு அதிகாரமளித்து ஏற்பாடு செய்யப்பட்டது.

23 ஜூலை 1840ல் பிரான்சின் உத்தரவுகளைச் செயல்படுத்தும் நிர்வாகியா யிருந்த அதிகாரிக்குப் பிரஞ்சிந்தியாவின் முழு ஆட்சிப் பொறுப்பையும் கொடுத்து கவர்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

29 ஆகஸ்ட் 1840ல் உயர்நீதி மன்றத்தில் ஜூரிகளாக உள்நாட்டினர் 20 பேர் நியமிக்கப்பட்டனர்.

7 பிப்ரவரி 1842ல் ஒரே கோர்ட் மூலம் அரசப் பிரதிநிதி என்ற பெயரில் நியாய விசாரணை நடத்தி வந்ததை விரிவாக்கி, முதல் நீதிமன்றம், சமாதான நீதி முதலிய பல துறை நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1 ஆகஸ்ட் 1842ல் பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு களைச் சரியாகப் பதிந்து பாதுகாக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1844ல் கோன்சேய்ழெனரால் என்ற ''நியமன அசம்பிளி'' நீக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் கொண்ட சபை ஏற்படுத்தப்பட்டது.

13 பிப்ரவரி 1849ல் சேம்பர் ஆப் காமர்ஸ் என்னும் வியாபார சபை உறுப்பினர்கள்; துணை ஆலோசகர்கள் அடங்கிய குழுவாக நிறுவப்பட்டது.

13 மே 1856ல் வீதிகளின் பெயர் தமிழிலும் பிரஞ்சி லும் பொறிக்கும் உத்தரவு தரப்பட்டது. வீடுகட்கு எண் இடும் முறை வகுக்கப்பட்டது.

1 செப்டம்பர் 1863ல் முத்திரை பாளையத்திலிருந்து வாய்க்கால் வழியாக பெரிய கடையிலும், கவர்னர் மாளிகை முன்புள்ள பூங்காவிலும் குடிநீர் வழங்குவது தொடங்கப்பட்டது. லமேரேஸ் என்னும் எஞ்சினியரின் இத்திட்டம் 1908ல் எல்லா வீடுகட்கும் குடிநீர் வழங்கும் திட்டமாக மாறியது. 1867ல் இந்திய உள்நாட்டு இராணுவப் படை நிறுவப்பட்டது.

1875ல் ''இந்து சினத்துப் பாங்கு'' என்ற பெயரில் ஒரு பாங்கு நிறுவப்பெற்றது.

31 ஆகஸ்ட் 1887ல் புதுச்சேரியில் தந்திக் கம்பிகள் அமைக்க இந்துசினத்துப் பாங்கு உரிமை வழங்கியது.

1 ஜனவரி 1896லிருந்து பிரஞ்சிந்திய பட்ஜட்டில் ரூபாய் நாணயப் புழக்கம் நடைமுறைக்கு வந்தது.

1898 ஆண்டு மார்ச் மாதத்தில் அரசாங்கம் பம்பா யிலிருந்தும், மோசாம்பிக்கிலிருந்தும், செனேகாலிலிருந் தும் மணிலாக்கொட்டை விதைகளை வரவழைத்து விதைக்க விநியோகித்தது.

இங்ஙனம் 19வது நூற்றுண்டு இறுதிவரை சீர்திருத்தும் வேலைகள் நடைபெற்று செப்பனிடப்பட்டன. இதற்குப்பின்வரும் காலத்தில் பிரஞ்சு ஆட்சி புதுச்சேரியிலும், அண்டையில் ஆங்கிலேயர் ஆட்சியும் நிலைபெற்றன. 1914-18 ஆம் ஆண்டு முதல் உலகப் பெரும்போர்க் காலத்தில், பிரஞ்சுப் பகுதிக்கும் ஆங்கில ஆட்சிப் பகுதிக்கும் இடையில் சுங்கச் சாவடி ஏற்பட்டதும், அதன்பின் சமாதான காலத்தில் இரு அரசினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் கூட்டாக ஏற்பாடு செய்ததும் குறிப்பிடத் தக்கனவாகும். பின் 1938 ஆம் இரண்டாம் உலகப் போரின்போது சுங்கச் சாவடிகள் ஏற்பட்டன. கடல் வழியாக புதுச்சேரி வாணிபம் நடைபெற்றது. அதன்பின் இந்திய ஆட்சியினர் மீண்டும் சுங்கம் ஏற்படுத்தினர். இந்த மாற்றங்களால் புதுவை வாழ் மக்களுக்குப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டு வந்த நிலையைத் தவிர வேறு அரசியல் மாறுதல்கள் பெருமளவில் ஏதும் ஏற்படவில்லை. அடுத்து 1954ல் ஏற்பட்ட இந்திய இணைப்பு விவரம் தருவோம்.



பிரஞ்சு தபால் நிலையம் வெளியிட்ட தபால் தலைகள்: வலப்பக்கம் (மேலே) இருப்பவை பிரஞ்சு தபாலாபீஸ் மூடப் பெற்றபோது இட்ட முத்திரையுடன் உள்ளன.

இணைப்புக்குப் பின்...

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் நாள் இந்தியப் பகுதியிலிருந்து ஆங்கில அரசு விலகி, ஆட்சிப் பொறுப்பை இந்தியரிடம் ஒப்படைத்து ''விடுதலை'' தந்த போதே, ஆங்கிலேயருடன் பிரஞ்சுக்காரரும் போர்த்துகீசியரும் வெளியேறி, அவ்வப்பகுதிகளும் விடுதலை பெற்று மக்கள் சுதந்திரமாக வாழ்வர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆயினும் பாகிஸ்தான் பிரிவினைபற்றியே சிந்தனையும் செயலும் இருந்ததால், ஏனைய வெளிநாட்டினரின் ஆட்சியில் இருந்த பகுதிகள் பற்றிக் கவனிக்க இயலாமல் போயிற்று. அதனைத் தொடர்ந்து, 1948-ல் அப்போதைய ''பிரஞ்சிந்தியா''வில் நடைபெற்ற தேர்தலின்போது இந்தியாவுடன் இணைவது பற்றிய பிரச்னை எழும்பியது. அப்பொழுது மத்திய அரசாங்க வெளிநாட்டுத் துறை அதிகாரி ராஜ்குமார் அவர்களும் புதுவைக்கு வந்து சென்றார். இப்பகுதி நிலை பற்றித் தம் அறிக்கையை வெளியிட்டார்.

பின் சில ஆண்டுகள் கழிந்தன. கடற் சுங்கம் தரைச் சுங்கமாக்கப்பட வேண்டும் என அப்போதைய பிரதிநிதி சபை கேட்டுக் கொண்டது. அதன்படி தரைச் சுங்கம் ஏற்படுத்தப்பட்டது.

இந்திய அரசின் தூதுவராகப் புதுச்சேரியில் பணியாற்றிவந்த அலிபெய்க், பானர்ஜி, தாண்டன் ஆகியோருக்குப் பிறகு திரு. கேவல்சிங் தூதுவராகப் பொறுப்பேற்றார்.

இந்தியப் பகுதிக்கும் பிரஞ்சுப் பகுதிக்கும் இடையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விதிகள் மிகவும் கண்டிப்புடன் நடத்தப்பட்டன.


1949 ஏப்ரல் முதல் உள்நாட்டு பாஸ்போர்ட் உள்ளவர்களே ஒரு பகுதியிலிருந்து மற்ற பகுதிக்குப் போக வர அனுமதிக்கப் பட்டனர். இந்த நிலையில் இந்திய அரசின் வெளிநாட்டு அலுவலக அதிகாரியாய் இருந்த R. K. நேரு அவர்கள் பாரிஸ் அரசாங்கத்துடன் பிரஞ்சுப் பகுதி பற்றிய நிலைமைகளைப் பற்றி விவாதித்தார். இச்சமயத்தில் பிரான்சின் பிரதமராக "மாண்டேஸ் பிரான்ஸ்" என்பவர் பதவி ஏற்றார். இவர் ஆட்சிக்காலத்திலும், இரு நாட்டினரும் இப்பிரச்னை பற்றிச் சமாதான முறையில் தீர்வு காணப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன் காரணமாகப் பிரஞ்சு அரசின் விருப்பப்படி, பிரஞ்சிந்தியப் பிரதிநிதிகளைக் கலந்து முடிவு காணும் வகையில், புதுவையிலிருந்து சுமார் 10 மைலில் உள்ள கீழூரில் இப் பிரச்னைபற்றி வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 18 அக்டோபர் 1954-ல் கீழூரில் 170 பிரதிநிதிகள் இந்தியாவுடன் இணைவதை ஏற்று வாக்களித்தனர். ஆனால் எட்டுப்பேர் எதிர்த்தனர்; என்றாலும் பெரும்பகுதி வாக்குகள் இணைப்பை ஆதரித்தன. இம் முடிவை ஏற்று, 1 நவம்பர் 1954-ல் ஆட்சிப் பொறுப்பை இந்திய அரசாங்கப் பிரதிநிதியிடம் நடைமுறையில் மாற்றித்தர, பிரஞ்சு அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

விழா நாள்

31 அக்டோபர் 1954 நடு நிசியில் கோயில் மணிகள் ஒலித்தன. இந்தியப் போலீஸ் அதிகாரிகள் எல்லாப் போலீஸ் நிலையங்களிலும் வந்து சேர்ந்தனர். விடியற்காலை 6-45-க்கு, அதுவரை இந்திய அரசாங்கத் தூதுவராகப் பணியாற்றிய திரு. கேவல்சிங் அவர்கள் புதுச்சேரி அர சு

ஆட்சித் தலைவராக (ஹைகமிஷனர்) இந்திய அரசினரால் நியமிக்கப்பட்டுப் புதுச்சேரி கவர்னர் மாளிகையில் வரவேற்கப்பட்டார். பிரஞ்சுக் குடியரசின் தனித் தூதுவராக வந்திருந்த திரு. பியேர் லாந்தி என்பவர் அவரைக் கவர்னர் மாளிகையின் அலுவல் அறையினுள் அழைத்துச் சென்றார். பிரஞ்சு அரசாங்கத்தின் சார்பில் திரு. பியேர் லாந்தியும், இந்திய அரசாங்கத்தின் சார்பில் திரு. கேவல்சிங்கும் நடைமுறை அதிகார மாற்ற உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.



நடைமுறை அதிகார மாற்ற ஒப்பந்தம்

இது நடந்தபோது கவர்னர் மாளிகையில் இந்திய அரசின் மூவண்ணக்கொடி பறக்கவிடப்பட்டதுடன் 21 மரியாதை குண்டுகள் முழங்கின. இதைத் தொடர்ந்து கவர்னர் மாளிகைக்கு எதிரில் பூங்காத் திடலில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்று. பல கட்சித் தலைவர்களும், நீதிபதிகளும், ஆர்ச்பிஷப்களும், மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இந்திய அரசின் சார்பில் வந்திருந்த

திரு. R. K. நேரு பேச்சுவார்த்தைகள் சமாதான முறையில் தீர்ந்தது பற்றித் தம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தார். மேலும் புதுவை ராஜ்ய மக்களுக்குச் சில வாக்குறுதிகளை இந்திய அரசின் சார்பில் அளித்தார். ராஜ்யத்தில் நிலவும் கலை, நாகரிகம், கல்வி முதலியவற்றில் மக்களின் கருத்தையறிந்தே மாறுதல் செய்யப்படும் என்றும், இதுவரை அந்நிய ஆட்சியில் துயருற்ற நிலைமை உடனடியாக மாற்றியமைக்கப்படும் என்றும் கூறினார். மாலையில் கேளிக்கைகளும் விளக்கலங்காரங்களும் நிகழ்ந்தன.

தேர்தல்கள்

இணைப்புக்குப் பின் சில மாதங்கள் வரை தரைச் சுங்கம் இருந்து வந்தது. நவம்பர் முதல் நாளிலிருந்தே கடற் சுங்கம் ஏற்படுத்தப்பட்டு, ஏற்றுமதி இறக்குமதி விதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. அதற்காக அதிகாரிகளும் இந்திய அரசாங்கத்தினரால் நியமிக்கப்பட்டு இங்கே பதவியேற்றனர். அரசாங்கத் தலைமைப் பொறுப்பை ஹைகமிஷனர் ஏற்று நடத்தி வரலானார். இந்திய அரசாங்கத்தின் "C" பிரிவு ராஜ்ய முறையமைப்பை யொட்டி இந்தப் புதுச்சேரிப் பகுதியும் நிர்வகிக்கப்படுகிறது.

இணைப்புக்குப் பின் புதுவை ராஜ்யமெங்கிலும் பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. 39 பிரதிநிதி சபை உறுப்பினர்களும், 16 நகராட்சி மன்றங்கட்கு 200 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

18-7-1955 முதல் 23-7-1955 வரை பல தொகுதிகளில் நகராட்சி மன்றத்திற்கும், பிரதிநிதி சபைக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. இத்தேர்தலில் காங்கிரஸ், மக்கள் முன்னணி, தேசிய காங்கிரஸ், சுயேச்சையாளர்கள் போட்டியிட்டனர். இதில் காங்கிரஸ்காரர்கள் பெரும் பகுதியினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

'வயது வந்தவருக்கு வாக்குரிமை' அடிப்படையில் நடைபெற்ற இத்தேர்தல்கள் பல கட்டங்களாக முடிவுற்றன. மொத்த வாக்காளரில் 87-5% விகிதம் வாக்களித்தது, இந்தியாவிலேயே மலையாளப் பகுதிகட்கு அடுத்தபடியாக மிக உயர்ந்த பட்ச அளவு ஆகும் எனத் தேர்தல் அதிகாரிகள் கூறினர்.

புதிய பிரதிநிதிகள்

1955-ஆக. 12-ஆம் நாள் மாலை நான்கு மணிக்கு பிரதிநிதி சபை மெம்பர்கள் புதுச்சேரி நகரமாளிகை மாடியில் அமைந்த அசம்பிளி மன்றத்தில் கூடினர். பிரஞ்சு அரசியல் சட்டப்படி அங்கத்தினர்கள் 39 பேரில் வயதில் மூத்தவரான புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றார். கூட்டம் துவங்கி 15 நிமிஷத்துக்குள் ராஜ்ய ஹைகமிஷனர் திரு கேவல்சிங் அவர்கள் ராணுவ மரியாதை ஏற்றுக் கொண்ட பின், தேசிய கீதம் முழங்க, அசம்பிளி மண்டபத்துக்கு வந்து. முறைப்படி தமது திறப்பு விழாச் சொற்பொழிவைப் பிரஞ்சு மொழியில் நிகழ்த்தினர். அவர் சென்ற பின் சபைத் தலைவர் (Speaker) மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பிரதிநிதி சபையில் பெரும்பான்மை பெற்ற காங்கிரஸ் கட்சி சார்பில் ஆறு ஆலோசகர்கள் தேர்வு நடந்தது.

பல ஆண்டுகளாகப் பிரஞ்சு ஆட்சியின்போது தலைமை ஆலோசகராக இருந்த திரு. குபேர் அவர்கள் உட்பட புதுச்சேரிப் பகுதி ஆலோசகர் மூவரும், காரைக்கால் பகுதி ஆலோசகர்கள் மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இப்போது (Speaker) பிரதிநிதி சபைத் தலைவராக இருப்பவர்; திரு. காமி செட்டி வரப்பிரசாதராவ் நாயுடு.

துணைத் தலைவர்கள்: திருவாளர்கள். அ. பா. ராமலிங்கம், அசப்பு பைரவசாமி, T. சினுவாசப்பிள்ளை, பார்லி

மெண்டரி செயலாளர்கள்: திருவாளர்கள், V. அருணா சலம், லூயி சவரி, செயலாளர்கள்: திருவாளர்கள், எர்ரா ஜகநாதராவ், N. தண்டபாணி. இப்போது அரசாங்க ஆலோசகர்கள் அவர்களின் பொறுப்பு விவரம்.

திருவாளர் எ. குபேர் :—தலைமை ஆலோசகர், நிதி, தொழில்கள், தொழிலாளர் துறைகள்,

திருவாளர் சந்திரசேகர செட்டியார் :—பொது மரா மத்து, மின்சாரம். மீன், துறைமுகத் துறைகள்.


திருவாளர் தியாகராச நாயகர் :—உள்நாட்டு நிருவாகம், கல்வி. போக்குவரத்துத் துறைகள்.

திருவாளர் தட்சணாமூர்த்தி முதலியார் :—சுகாதாரம், பொதுநலம், கூட்டுறவுத் துறைகள்.

திருவாளர் முகமது யூசுப் :—வருமானம், கால்நடை, செய்தித் துறை.

திருவாளர் P. சண்முகம் :—விவசாயம், கிராம நலம், தாழ்த்தப்பட்டோர் நலத்துறைகள்.

பிரதிநிதி சபை உறுப்பினர்கள் :—பாரதிதாசன், அருள் ராஜ், அண்ணுசாமி, கிளேமான்சோ முருகசாமி, N. கோவிந்தராசு, M. M. உசேன், லத்தூர் ஜொசேப், V. நாராயணசாமி, பக்கிரிமுகமது, R. L. புருஷோத்த மன், N. ரங்கநாதன், வ. சுப்பையா, ந. சேதுராமன், R. திருக்காமு ரெட்டியார். V. வெங்கடசுப்பா ரெட்டியார், ஷேக் தாவுத் மரக்காயர், E, தெசாமா, K. M. குருசாமிப் பிள்ளை, V, ராமலிங்கம், V. ராமசாமிப் பிள்ளை, D. ரத்தின சபாபதிப் பிள்ளை, O. ரங்கசாமிப் பிள்ளை, V. N. புரு ஷோத்தமன், C. E, பரதன், மு. பத்மநாபன் ஆகியோர்.



கடற்கரையும் துறைமுக அலுவலகமும்

காணத்தகுந்தவை


இனி இங்குக் காணத் தகுந்த புராதனமான, அழகு வாய்ந்த இடங்கள் பற்றி அறிந்து கொள்வோம்

கடற்கரையும் கடற்பாலமும்

புதுச்சேரியின் கிழக்கில், வங்காளக் குடாக் கடலில், 1861ஆம் ஆண்டு பிரான்சின் கடற்படை மந்திரி அனுமதியுடன், கடற்பாலம் கட்டத் தொடங்கப்பட்டது. முதலில் 192 மீட்டர் நீளம் அமைக்கப்பட்டது. பின்னர் 1880ல் 64 மீட்டர் நீளம் இன்னும் நீட்டப்பட்டது. பின்பு 1909ல் மேலும் 80 மீட்டர் நீட்டப்பட்டது. கடற்பாலத்தின் வடபுறமும் தென்புறமும் உள்ள தடுப்புச் சுவர் பகுதி பகுதியாக எழுப்பப்பட்டு 1860ல் முடிக்கப்பட்டது; 'லமேரேஸ்' எனும் எஞ்சினியரால் கட்டி முடிக்கப்பட்டு, 15 ஆகஸ்ட் 1866ல் திறந்து வைக்கப்பட்டது.

கப்பல்களில் வந்து இறங்கும் சரக்குகளும், ஏற்றப் படும் சரக்குகளும் தோணிகள் வழியாக அனுப்பப்பட்டு வந்தாலும், இந்தப் பாலம் ஏற்றுமதி இறக்குமதிக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இப்பாலத்தின் மீது நடுவில் தண்டவாளப் பாதை அமைத்து, அதனைப் புகைவண்டிப் பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப் பாலம் மக்கள் உல்லாசமாக உலவுவதற்கு உதவி வந்தது. இத்தகைய பாலம் இந்தியாவில் எங்கும் இல்லை என்பர்.

கடந்த 1952ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடெங் கும் அடித்த பெரும் புயல் காற்று, இப்பாலத்தின் பழுது



துறைமுகப் பாலம்

பட்டிருந்த நடுப்பகுதியைக் கடலுள் அமிழ்த்திவிட்டது. இப்பொழுது பாலத்தின் முக்கால் பகுதி ஒரு துண்டாக வும், பின்பகுதி ஒரு துண்டாகவும் காண்கின்றன. பழுதுற்ற காரணத்தால் இந்தப் பாலத்தின் மீது போக வர இப்போது பொதுமக்கள் அனுமதிக்கப் படுவதில்லை.

கற்றூண்கள்

கடற்பாலத்தின் முன்பும், எதிரில் உள்ள துய்ப்ளேக்சு சிலையின் அருகிலும் உயர்ந்து விளங்கும் கற்றூண்களில் நாயக்கர் காலத்துச் சிற்பங்கள் உள்ளன. இவை செஞ்சி யரசரால் தூய்ப்ளேக்சுக்கு அன்பளிப்புச் செய்யப்பட் டவை. அரசாங்க மாளிகையில் அணி செய்ய எடுத்து வரப்பெற்ற ஏராளமான தூண்களில் பெரும் பகுதி 17‹ 1ல் ஆங்கிலேயர் புதுச்சேரி நகரைத் தாக்கி அழித்த போது மண்ணுள் புதையுண்டது. எஞ்சியவைதாம் இப் போது காணப்படுவன.

பூங்கா


கடற்பாலத்தின் நேர் எதிரே, அரசாங்க மாளிகைக்கு வனப்பூட்டுவதாக அமைந்துள்ள பூங்கா, கடற்பாலம் திறக்கப்பட்ட அன்றே திறந்து வைக்கப்பட்டது. "நப்போலியன் III" பெயரால் கட்டி முடிக்கப்பட்ட இப்பூங்காவுக்கு, 1945க்குப் பிறகு இரண்டாவது உலகப் போரில் பிரான்சுக்குப் பெருவெற்றியைத் தேடித்தந்த "ஜெனரல் டிகால்" பெயரால் "ஷார்ல் டிகால் பூங்கா" எனப் பெயரிடப்பட்டது. பூங்காவின் நடுநாயகமாக விளங்கும் "ஆயி மண்டபம்". ஆயி எனும் பெயரிய தாசியின் கொடை உள்ளத்தை வியந்து, நினைவுக் கட்டிடமாக எழுப்பப்பட்டது. (புத்தகத்தின் முகப்புப் படத்தில் இம்மண்டபம் காண்க.) இம் மண்டபத்தின் சுவரில் "ஆயி குளம்" பற்றிய வரலாறு பொறிக்கப்பட்ட கல் வெட்டொன்றுள்ளது. பூங்காவின் அமைப்பும், அதன் நடுவே உள்ள மண்டபமும், பூங்காவின் வடமேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் அல்லிக்குளமும் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தருவனவாகும்.

துய்ப்ளேக்ஸ் சிலை

பூங்காவுக்கும் கடற்பாலத்திற்கும் இடையில் அமைந்துள்ளது இச்சிலையாகும். மிகச் சிறிய பதவியில் அமர்த்தப்பட்டு, மிகப் பெரிய பதவியில் உயர்ந்து, குறுகிய எல்லை கொண்டிருந்த புதுச்சேரி ஆட்சி இந்தியாவின் அளவு விரிந்து, மலர்ச்சி பெறத் தன் உழைப்பையெல்லாம் சுமார் 12 ஆண்டுகள் செலவிட்டான் தூய்ப்ளேக்ஸ். அத்தகைய அரசியல் வல்லானின் சிலையாகும் அது. இது 16 ஜுலை 1870ல் நாட்டப்பட்டது.

கலங்கரை விளக்கம்

துய்ப்ளேக்ஸ் சிலையின் இடது பக்கத்தில் வடகிழக்குப் பகுதியில் கடல் மட்டத்திற்கு 89 அடி உயரத்தில்,



கலங்கரை விளக்கமும், போர் வீரர் நினைவுச் சின்னமும்.

3° உயர ஒளியுடன் 1836ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதி எழுப்பப்பட்ட கலங்கரை விளக்கம் காணப்படும். இதனைக் கட்டி முடிக்கப்பட்டபோது 16 மைல் தொலைவு ஒளிவீசும் நிலையில் இருந்தது. இப்போது இவ்விளக்கம் ஆயிரம் வாட் ஒளிவீசும் நிலையில் விரிவாக்கப்பட்டு, 28 மைல் வரை ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

இசைப் பயிற்சி மண்டபம்

துய்ப்ளேக்ஸ் சிலையின் வலது பக்கத்தில் தென்மேற்குப் பகுதியில் ஒரு பூங்காவும் மேடையும் காணப்படும். 1921-ல் திறந்து வைக்கப்பட்ட இம்மனை, புதுச்சேரியில் சிறந்த கொடை வள்ளலாகத் திகழ்ந்த கு. லட்சுமண சாமி செட்டியார் கட்டி உதவியது. அவர் கட்டத் தொடங்கி அவரது மனைவி சுந்தரம்மாளால் முடித்து வைக்கப் பட்டது. இப்பூங்கா மேடை மீது இராணுவத்தினர் இசைப் பயிற்சி பெறுவது வழக்கம். அண்மையில்

இதனுள் வானொலி பரப்பும் நிலையம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

செயின்ட்லூயி கோட்டை

பூங்காவுக்குத் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு பள்ளம் வரலாற்றில் இடம்பெற்ற தொன்றாகும். அங்கே ஒரு பள்ளமும், அதன் வாயிலில் பீரங்கி ஒன்றும் காணப்படும். சில சுருள் படிகள் கொண்ட சுரங்க வாயிலும் காணலாம், தற்பொழுது சில கஜ அகல நீளமுடைய தூர்ந்துபோன பள்ளம் நீண்ட சரித்திரமுடையது.

புதுச்சேரியின் வரலாற்றில் இப்பள்ளம் ''செயின்ட் லூயி கோட்டை'' என்ற பெயரில் பெரும் பாதுகாப்புக் கோட்டையாக விளங்கியது. துறைமுகத்தின் அருகில், அரசாங்க அலுவல் பாதுகாப்புச் சுரங்க அரண்மனையாக இது விளங்கியிருக்கலாம். இதனைக் கட்டியது அரசியல் சட்ட விரோதம் என இந்தியக் குறுநில மன்னர்கள் கடுஞ் சினம் கொண்டதும் உண்டு. பின் இதனை நாசமாக்கி, பிரஞ்சு அரசாங்கத்தையே சிதற அடித்த மகிழ்ச்சியைப் பெற்றனர் ஆங்கிலேயர். இதற்காக ஏற்பட்ட போர்கள் எத்துணையோ! துய்ப்ளேக்ஸ் மிகக் கடுமையுடன் எதிர்த்துப் போரிட்டுப் புதுச்சேரியைக் காத்துவந்தபோது இக் கோட்டையைத் தன் கண்ணாகப் போற்றினான். இத்தகு சிறப்பைப் பெற்ற கோட்டையின் சிதைவை-மிகச் சிறு பகுதியைத்தான் இப்போது காண்கிறோம்.

நகர மாளிகை

இது கடற்கரையோரத்தில் ''கூர்ஷப்ரோல்'' வீதியில் துறைமுக அலுவலகத்திற்கு எதிரில் உள்ளது,

இம்மாளிகையின் கட்டிடத்திற்கு அடிப்படைக்கல் 16 ஜூலை 1870-ல் நாட்டப்பட்டது. 30 மே 1880-ல் புதுச்சேரி வட்டத்திற்கு முதன் முதலாக நகராட்சித் தேர்

தல் நடைபெற்றது. தலைநகர் வட்டார முனிசிபாலிடிக்கு மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் "லெயோன்கோர்" ஆவர். இக்கட்டிடத்தின் மாடி, புதுவை ராஜ்ய அசம்பிளி மண்டபமாகப் பயன்படுத்தப்படுகிறது. அழகும், சிறந்த ஓவியங்களும் நிறைந்துள்ளது இம்மண்டபம். அசம்பிளி அலுவலகமும் இதன் ஒருபுறத்தே அமைந்துள்ளது. இதன் மாடிப்படியின் மேல் வாயிலில் "புருய்தோன்"



நகர மாளிகை [முனிஸிபாலிட்டி]

என்பவர் எழுதிய படம் கண்டு மகிழத்தக்கது. இப்படம் பிரான்சின் அழகுக் கலைகள் பிரிவு மந்திரி 1887-டிசம்பரில் அளித்த "நீதியும்-குற்றத்தைத் தொடரும் தெய்வப் பழியும்" என்ற படமாகும். பதிவுத் திருமணங்கள் நடத்துதற்கும், வரவேற்பு விழாக்களுக்கும் இம்மண்டபத்தைப் பயன்படுத்துவதுண்டு. இந்த மண்டபத்தை, அசம்பிளிக் கூட்டத் தொடக்கத் திறப்பு விழா நாள் தவிர்த்து, ஏனைய நாட்களில் பொது மக்கள் பார்த்து மகிழலாம்,

போலீஸ் தலைமை அலுவலகம்

இந்த அலுவலகம் கடற்கரையோரத்திற்கு அடுத்த தெருவில் நகர மாளிகைக்கு எதிரில் உள்ளது, இதற்கு இரு கட்டிடங்கள் உள்ளன. வடக்குப் பகுதியில் உள்ளது சிவில் போலீஸ் அலுவலகம், இங்கு டி. எஸ். பி. அதிகாரி உள்ளார். தெற்குப் பகுதியில் உள்ள கட்டிடம் உள்ளூர் இராணுவத்தினர் அலுவலகமாகும். இங்கு ஐ. ஜி. என்னும் அதிகாரி உள்ளார்.

பொது நூல் நிலையம்

இது 16 மே 1827-ல் நிறுவப்பட்டது. பொது நூல் நிலைய மட்டுமின்றிப் பத்திரங்களைப் பாதுகாக்கும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இடம் கடற்கரையோர வீதிக்கு மூன்றாவது தெருவில் உள்ளது. 1816-க்கு முற்பட்ட பத்திரங்களும் இதில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்கு ஆநந்தரங்கப்பிள்ளை பயன்படுத்திய பொருள்களும், புத்தகங்களும், படங்களும் உள்ளன. ‘‘ அருகன்மேடு ’’ புதை பொருள்களும், புதுச்சேரியின் சுற்றுப்புறங்களின் கோயில்களின் படங்களும், சிற்பங்களும் உள்ளன. இதில் 1920-ல் 16000 புத்தகங்களும், 1936-ல் 25000 புத்தகங்களும், 1954-ல் 28741 புத்தகங்களும் இருந்தன. தற்போது 33161 நூல்கள் உள்ளன.

இந்நூல் நிலையத்தில் பிரஞ்சு, ஆங்கில, தமிழ்ப் புத்தகங்கள் உள்ளன.

இந்நிலையம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8-மணி முதல் 10-30 மணி வரையும் திங்கட்கிழமைகளில் மாலை 4-மணி முதல் 7-மணி வரையும், மற்ற நாட்களில் காலையில் 9-மணி முதல் 11-30 மணி வரையும், மாலையில் 4-மணி முதல் 7-மணி வரையும் திறந்திருக்கும்.

அரசாங்க மருத்துவ விடுதி

1853-ல் ஏற்பட்டது இவ்விடுதி, 1927-ல் பயாலஜிப் பிரிவும், சர்ஜிகல் பிரிவும், பரிசோதனைப் பிரிவும், ஆபரேஷன் தியேட்டரும் ஏற்பட்டன. 1936-ல் பிரசவ விடுதி தனியாக்கப்பட்டது. இப்போது கண், மூக்கு, வாய், செவி தனித்தனிப் பிரிவுகளும், இலவச மருத்துவப் பகுதிகளும் ஏனைய எல்லாப் பிரிவுகளும் கொண்டு விளங்குகிறது. இம்மருத்துவ விடுதி பூங்காவுக்கு மேற்கே உள்ளது.

அரசாங்க மருந்தகம்

இங்குப் பிரஞ்சு மருந்துகளும், ஏனைய வெளிநாட்டு மருந்துகளும், சொந்தத் தயாரிப்புக்களும் மிகக் குறைந்த இலாபத்துடன் விற்கப்படுகின்றன. இவ்வரசாங்க மருந்தகம் 20-ஜூன் 1829-ல் நிறுவப்பட்டது. பிறகு 5 ஜூலை 1924-ல் விரிவாக்கப்பட்டது. இவ்வகம் மருத்துவ விடுதிக்குத் தெற்கில் வலதுபுறத்தில் உள்ளது, இங்கு இரவு நேரங்களிலும் மருந்து விற்பனையுண்டு,

சேம்பர் ஆப் காமர்ஸ் கட்டிடம்

மார்ச் 1914-ல் ஏற்பட்ட சேம்பர் ஆப் காமர்ஸ் எனும் அதிகார பூர்வமான வியாபாரிகள் சங்கக் கட்டிடம் இது. ஆட்சியாளர்கள், அறிஞர்கள், நகராட்சித் தலைவர்கள் ஆகியோரது உருவப் படங்கள் நிறைந்துள்ள பெருமண்டபம் ஒன்று இதில் உண்டு,

இந்து சீனத்து பாங்கு கட்டிடம்

இணைப்புக்குப் பின் இந்திய பாங்கின் நிருவாகத்துக்கு உட்பட்டுள்ளது. மிக அழகிய பூங்காவும், சோலையும் சூழ்ந்த அரிய அமைப்புள்ள கட்டிடம் இது. வியத்தகு கட்டிடக் கலையுடன், பாதுகாப்பு மற்றும் வசதியறைகளும் கொண்டிருப்பது கண்டு மகிழத்தக்கது,

மருத்துவக் கல்லூரி


1956-வரை முதல் நீதி மன்றமாகத் திகழ்ந்த கட்டிடம் இது. இப்போது மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டிருக்கிறது. இது பூங்காவின் மேற்கும் பக்கத்தில் பிரசவ விடுதிக்குப் பக்கத்தில் வடபுறம் அமைந்துள்ளது.

தபால் தந்தி நிலையம்

இந்நிலையம் பூங்காவின் வடமேற்கு மூலையில் ரங்கப் பிள்ளை வீதி சந்திப்பில் உள்ளது. இதுவே புதுச்சேரி வட்ட தபால் தந்தி நிலையங்களின் தலைமை நிலையமாகும். இங்கு "ட்ரங்க்கால்" என்னும் நேர்முகப் பேச்சு வசதியும் உண்டு.

கவர்னர் மாளிகை

1706-ஆம் ஆண்டு, பிரான்சுவா மர்த்தேன் மரணம் ஏற்படும் முன்னதாக கட்டி முடிக்கப்பட்ட இம்மாளிகை




கவர்னர் மாளிகை

பூங்காவின் வடப்பக்கம் உள்ளது. இம்மாளிகையின் ஒரு வாயில் துய்ப்ளேக்ஸ் வீதிப் பக்கமும் மற்றையது ரங்கப் பிள்ளை வீதியிலும் உள்ளன. இதுதான் இப்போது உள்ள ஆட்சித் தலைவரின் (ஹைகமிஷனர்) இருப்பிடம். இதனுள் பழங்காலச் சிலைகளும் சிற்பங்களும் காணப்படு கின்றன.

ஆன்ழ் மாதாக் கோயில்

14 மே 1851-ல் இக்கோயிலுக்குக் கல் நாட்டப்பட் டது. 1855–மார்ச் மாதம் காலனி என்ஜினியரிங் அதிகாரி "லூயிகேர்" என்பவரால் திறந்துவைக்கப் பட்டது.



ஆன்ழ் மாதா கோவில்

இக்கோயிலுள்ளே 15 ஆகஸ்ட் 1863-ல் நெப்போலி யன் III அரசனால் அளிக்கப்பட்ட படம் ஒன்று திகழ் கிறது. முற்காலத்தில் அசம்பிளி இங்கேதான் நடந்து வந்தது. இம்மாதாக் கோயிலின் தென்புற வாயிலின்

எதிரில் இருப்பது. முன்னாள் இப்பகுதியில் திறமை வாய்ந்த தளபதியாக விளங்கிய "புஸ்ஸி" என்பவரின்



"ழான்தார்க்" சிலை

கல்லறையாகும். இம் மாதாக் கோயிலின் கிழக்கு வாயிலின் நேரே இருப்பது பிரஞ்சு வீராங்கனை "ழான்தார்க்" சிலை அமைந்த தோட்டமாகும். ஆங்கிலேயரை எதிர்த்துத் தன் பிரஞ்சுத் தாயகத்தைக் காக்கத் துணிந்த "ழான் தார்க்" வெற்றிக் கொடி பிடித்துள்ள சிலையை இங்கே காணலாம்.

புராட்டஸ்டண்ட் கோயில்

அரசாங்க மருந்தகத்துக்குப் பக்கம் உள்ளது புராட்டஸ்டண்ட் கோயில் ஆகும். இக்கோயில் 12 செப்டம்பர் 1844-ல் கட்டப்பட்டதாகும்.

பிரஞ்சுக் கல்லூரி

மிகப் பழமை வாய்ந்த இக்கல்லூரி, இன்றும் பிரஞ்சு அரசாங்கத்தால் நடத்தப்படும் நிறுவனம் ஆகும்.

அரசினர் அச்சகம்

பிரஞ்சுக் கல்லூரிக்கு அண்மையில் சிறிய தெருவில் உள்ளது அரசினர் அச்சகம் ஆகும். இது 1817ல் நிறுவப்பட்டது. 19 ஜுலை 1828 முதல் தமிழ்ப் பகுதி இணைக்கப்பட்டருக்கிறது.

பொது மராமத்து அலுவலகம்

இவ்வலுவலகம் அச்சகத்திற்குப் பின்புறம் புஸ்ஸி வீதியில் அமைந்துள்ளதாகும். நீர்ப்பாசனம், சாலைப் பராமரிப்பு, பாலங்கள் முதலியவைபற்றிய அலுவலங்கள் இங்கே உள்ளன. இவ்வலுவலகத்தின் ஒரு பிரிவாக இயங்கும், சித்திரம்—தொழிற் பயிற்சிப்பள்ளி இதன் பக்கத்தில் அமைந்துள்ளது.

சிறிய மணிக்கூண்டு

மகாத்மா காந்தி வீதியும் புஸ்ஸி வீதியும் சந்திக்கும் நாற்சந்தியில் உள்ளது இது. இம்மணிக் கூண்டு 1892ல் கட்டி முடிக்கப்பட்டது. இதற்கு புதுச்சேரிக்கு வந்த மைசூர் மகாராஜா 25 ஜனவரி 1892ல் கல்நாட்டினார்.

இக்கூண்டை நிறுவிய வள்ளல் கு. லட்சுமணசாமி செட்டியார் ஆவார். இவர் அவ்விழாவில் மைசூர் மகாராஜாவுக்குப் பொன்னாலான கொல்லறு ஒன்றைப் பரி

சளித்தார். இதைச் சேர்ந்துள்ளது மார்க்கட் ஆகும். இது 12 ஜுன் 1886ல் கட்டப்பட்டது.

கொலோனியல் பூங்கா


இம் மணிக்கூண்டுக்கு மேற்கே சுமார் ஒரு பர்லாங்கு சென்றால் நான்கு வீதிகளின் சந்திப்புத் தென்படும். இப் பகுதியே ஓதியஞ்சாலைப் பகுதியாகும். மேற்கே செல்லும் பாதை உழவர்கரை, வில்லியனூர் வழியாக விழுப்புரம் செல்வதாகும். இந்தப் பாதையில் இருப்பதே " கொலோனியல் பூங்கா " என்னும் மிகப் பெரிய அழகிய இயற்கை வளத்தோட்டமாகும். இன்றைய விவசாயத்துறை, மீன் துறை அலுவலகங்கள் இங்கே இருக்கின்றன. இத்தோட்டம் மிகவும் எழிலுடையது. பயன்தரும் மரங்களும், வண்ணமலர்ச் செடி கொடிகளும் நிறைந்துள்ளது. அழகிய சாலைகள் பிரிக்கப்பட்டு ஆங்காங்கே செய்குளங்களும், சோலைகளும் அமைக்கப்பட்டு உள்ளன.

1866ல் ஏற்படுத்தப்பட்ட இப்பூங்கா 1887ல் புதுச்சேரி நகரமேயர் தலைமையில் இளங் குற்றவாளிகள் விடுதியாக மாற்றப்பட்டிருந்தது. இப்பூங்கா தென்னிந்தியாவில் சிறந்த ஒரு பூங்காவாகும்.

பெரிய மணிக்கூண்டு

இம் மணிக்கூண்டு புதுச்சேரியின் வணிக நிலையங்கள் பெரும்பான்மையும் சூழ்ந்திருக்கும் துய்ப்ளேச்சு தெருவின் நடுப்பகுதியில், கடைத்தெரு போலிஸ் நிலையத்தின் தெற்கில் அமைந்துள்ளது. இக் கூண்டு ஒன்றே சுமார் ஒரு நூற்றாண்டுக் காலமாகப் புதுச்சேரி மக்கட்குச் சரியான மணி நேரத்தை அறிவிக்கும் முறையில் முழங்கி வருகிறது. இதனை 12 ஏப்ரல் 1851ம் ஆண்டு பெற்ற அரசாங்க அனுமதியின் பேரில், கடலூர் சிரஸ்தார் தியாகு முதலியார் என்பவரின் பெயரால் அவரின் மைத்துனர் தம் சொந்தச் செலவில் கட்டத் துவங்கினர். இது 29 ஜுலை

1852ல் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு மாதம் ஒரு முறை சாவி கொடுக்கப்படுகிறது. இக் கூண்டின் உச்சி யில் உள்ள பெரிய வெண்கல மணிமீது இரு நாக்குகள் ஓங்கி ஒலிக்க இதுவரை தவறியதில்லை. இம் மணிக்



மணிக்கூண்டு

கூண்டின் அடிப்புறத்தைச் சுற்றி அமைந்துள்ள கடைத் தெரு "பெரிய கடை" என்று அழைக்கப்படுவதாகும். இங்குக் காய்கறிகள், மளிகை, மீன், இறைச்சி முதலியன விற்குமிடங்கள் தனித்தனி யமைந்துள்ளன. இந்த அமைப்பு 25 நவம்பர் 1826ல் ஏற்பட்டதாகும்.

சிறைக்கூடம்


மணிக்கூண்டின் எதிரில் (வடபுறத்தில்) அமைந் துள்ளதே புதுச்சேரியின் சிறைக்கூடமாகும்.

ஆநந்த ரங்கப்பிள்ளை இல்லம்

பெரிய கடையின் தென்புறம் உள்ள தண்ணீர்த் தொட்டி ஆநந்தரங்கப் பிள்ளை நன்கொடையாகும். அத் தொட்டியின் எதிரில் அமைந்துள்ளது ஆநந்தரங்கப் பிள்ளையின் இல்லம். மிகச் சிறந்த அரசியல் தலைவரும் வள்ளலும் ஆகிய ஆநந்தரங்கப் பிள்ளையின் ''நாட்குறிப்பு'' புகழ்பெற்ற வரலாற்றுத் தொடர் ஓவியம் எனலாம். இவ் வில்லத்தினுள் பிள்ளையவர்கள் பயன்படுத்திய சில பொருட்கள் உள. இவ்வீடு இங்கு அமைந்த காரணத் தாலேயே இத்தெரு '' ரங்கப் பிள்ளை வீதி '' என வழங்கி வருகிறது.

மிசியோன் வீதி மாதாக் கோவில்

மிசியோன் வீதி மகாத்மா காந்தி வீதிக்கும், செஞ்சிச் சாலைக்கும் இடையில் தெற்கு வடக்காக உள்ள நீண்ட வீதியாகும். ''மிசியோன் எத்ரான்மேர் வீதி'' எனப்



மாதா கோயில்


பெயர் பெறும். இவ்வீதியில் துய்ப்ளேக்ச் சந்தியின் தெற்கில் உயர்ந்து விளங்கும் அழகிய ஒரு மாதாக் கோவிலைக் காணலாம். இது மிகவும் தொன்மையுடையது. இதன் ஒரு புறம் அமைந்துள்ள மிஷன் பள்ளியும், மிஷன் நிறுவனமும் மிகவும் பழமையானவை. 1689ல் நிறுவிய "மிசியோன் எத்ரான்ழேர்" நிறுவனத்தின் வளர்ச்சியே இதுவாகும். இம்மாதாக் கோயில் முன்னர் இந்துக்கள் வணங்கிய வேதபுரி ஈசுவரன் கோயிலாகத் திகழ்ந்தது எனவும், துய்ப்ளேக்ஸ் காலத்தில் வன்முறையில் கிறித்துவக் கோயிலாயிற்று எனவும் கூறப்படுகிறது.

இதற்கு ஆதாரமாக உள்ள குறிப்புக்கள் பலவற்றுள் ஒன்றினை மட்டும் இங்கே குறிப்பிடலாம்; இக்குறிப்பு ஆநந்தரங்கப் பிள்ளையின் புகழ் பாடும் "ஆநந்தரங்க கம்பு" எனும் நூலின் ஆங்கிலக் குறிப்புடன் வெளியான 1948-ம் ஆண்டு பதிப்பில் காணப்படுகிறது.

"ஐம்பதாண்டு காலமாகக் கிறித்து மதத் தலைவர்கள் திட்டமிட்டுச் செயல்பட முடியாமல் போன ஒன்று இந்துக்களின் தலைவர் ஆநந்தரங்கப் பிள்ளை உயர் பதவியில் இருக்கும்போது நடைபெறலாயிற்று. 1748ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாளில் புதுச்சேரி ஆங்கிலத் தளபதிகள் லாரன்ஸ், பாஸ்கவன் ஆகியோரால் கடல் வழியிலும், தரை வழியிலும் கடுமையாகத் தாக்கப்பட்டு, முற்றுகை இட்டிருந்தபோது, இந்த வேதபுரீசுவரர் கோயில் தரைமட்டமாகத் தகர்க்கப்பட்டது. மதவிரோதச் செயல்களும் நடைபெற்றன. இது நிகழ்ந்தபோது பராதி எனும் பிரஞ்சுத் தளபதியும் இருந்தான். துய்ப்ளேக்சின் மனைவியும் உடனிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது." இம்மத வெறிபிடித்த பராதி தஞ்சை அரசனின் தடையை மீறியும் காரைக்காலில் கோயில் படங்களை உடைத்தெறிந்தான் எனவும் குறிப்பிடப்படுகிறது. இத்தகு வரலாற்றையுடையதாகும் இம்மாதாக் கோவில்.

இருதய ஆண்டவர் கோயில்

இக்கோவில் புகைவண்டி நிலையத்திற்கு எதிரில், மகாத்மா காந்தி வீதியின் தொடக்கத்தில் உள்ளது.




இருதய ஆண்டவர் கோயில்

இஃது திறமை மிகுந்த ஓவிய வேலைப்பாடுகள் அமைந்த கிறித்துவக் கோயில் ஆகும். இதன் பெயர் "இருதய ஆண்டவர் கோயில்."

புகைவண்டி நிலையம்

இந்நிலையம் புதுச்சேரியின் தெற்கில், மகாத்மா காந்தி வீதி தொடக்கத்தில் உள்ளது. "பாண்டிச்சேரி ரயில்வே



ரயில் நிலையம்

கம்பெனி" என்ற தனி நிறுவனம் 18 ஜூன் 1878-ல் காலனி மந்திரிசபை ஆலோசகர்களால் ஏற்படுத்தப்பட்டு, பின்னர் சலுகைச் சட்டப் பிரிவுகளால் விரிவாகி, வில்லிய னூர் வழியாக விழுப்புரம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. 14 அக்டோபர் 1879-ல் முதல் ரயில் புதுச்சேரி நிலையத்தை அடைந்தது. இந்த நிலையம் அதிகார பூர்வமாக 15 டிசம் பர் 1879-ல் திறக்கப்பட்டது.

கண்ணாடி மாளிகை

புதுவையில் வாழ்ந்த செல்வந்தர் சின்னைய முதலியார், விருந்தினர்க்காகவும், கேளிக்கை நடத்துவதற்காகவும் கட்டி முடித்த இம்மாளிகை, உட்புறம் முழுதும் கண்ணாடி யால் ஆகியது. மேற்கூரையும் கண்ணாடியுடன் இலங்கு கிறது. அழகிய தோற்றமும் வியப்பும் அளிக்கும் கட்டி டம். இப்போது இதன் சிறப்புகள் மிகவாகக் குன்றி விட்டன எனலாம்.

மணக்குள விநாயகர் கோயில்

பல அழகிய கட்டிடங்களைப் பெற்றிருக்கும் கடற்கரைப் பகுதியில், கவர்னர் மாளிகையின் அருகில் உள்ளது.

பழமை வாய்ந்தது அல்ல எனினும் ஆனந்தரங்கப் பிள்ளைக்கு முந்திய காலத்தது எனக் கருதப் படுகிறது.

"வாழ்க புதுவை மணக்குடத்து
வள்ளல் பாத மணிமலரே"

எனக் கவியரசன் பாரதி தனது விநாயகர் நான்மணி மாலையில் சிறப்புறுத்திக் கூறியிருப்பதே சாலும்! அண்மையில் இவ் வாலயத்தின் கொடி மரத்துக்குத் தங்கத் தகடு போர்த்தப் பெற்று, செப்பம் செய்து விழா நடைபெற்றது.


அம்பலத்தாடையார் மடம்

மடத்தின் பெயரைத் தெருப் பெயராக அமைத்திருக்கிறார்கள்—ஒளி அதிகம் இல்லாத மடம் எனினும் புகழ் ஒளி மிக்கது என்று சைவப் பெரியார் மதிக்கின்றனர். 'வான்கலந்த' மாணிக்கவாசகர் தம் திருவாயாற் சொல்ல, சிற்றம்பல உடையார் எழுதிய திரு வாசகத்தின் மூல ஏடு இம்மடத்துள் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறப் படுகிறது. இதனை ஆய்ந்து உதவின் தமிழுக்கு அருந் தொண்டாகும் எனத் தமிழ் அறிஞர் கூறுகின்றனர்.

'காளத்திசுரன் கோயில்' இம்மடத்தின் பக்கத்தில் உள்ளது.

ஈசுவரன் கோயில்

காந்தி வீதியில் அமைந்துள்ளது. இறைவன்: வேதபுரீசர். இறைவி: திரிபுரசுந்தரி. புதுவையை வேதபுரம் எனப் பழய நூல்கள் சிலவற்றில் குறிப்பிடுகின்றனர்.



வேதபுரீஸ்வரன் கோயில்

பாரதியும் வேதபுரம் எனவே கூறியுள்ளார். கோயில் பெயர் உள்ள தெருவில் கிழக்கே போனுல் நாம் காண்பது பாழடைந்த இல்லம் தெற்கு நோக்கி நிற்கிறது. இதுவே பாரதி தங்கியிருந்த இல்லம். ''அன்ருெரு நாள் புதுவை நகர்தனிலே, கீர்த்தி அடைக்கலஞ்சேர் ஈசுவரன் தர்ம ராஜா என்ற பெயர் வீதியிலோர் சிறிய வீட்டில்'' என முழங்கிய வீடு இது !

இவற்றைத் தவிர வரதராஜப் பெருமாள் கோயில், கன்னிகா பரமேஸ்வரி, திரௌபதி, காமாட்சியம்மன் கோயில்கள் உள்ளன. புதுவையின் வடக்குப் பகுதி சிறு தேவதைகள் கோயில் நிறைந்தது எனக் கூறலாம்.

புதுச்சேரி சுற்றுப்புறம்

முக்கிய இடங்கள்

அரிக்கமேடு : (அருகன்மேடு) புதுச்சேரி கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள வீராம்பட்டினம் என்ற சிற்றூரை அடுத்துள்ள 'காக்காயங்தோப்பு' என்ற பகுதியில் சில ஆண்டுகட்கு முன்பு ஆராய்ச்சிகள் நடந்தன. இந்நூலின்



அருகன்மேடு புத்தர் சிலை

வரலாற்றுப் பகுதியில் குறிப்பிட்ட ரோமர் தொழிற்சாலை இவ்விடத்தில் நடந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆராய்ச்சியில் கிடைத்த பானை ஓடுகள், நகைகள், பாண்டங்கள் சிலவற்றின் உதவியால் கால நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றில் சில புதுவை பொது நூல் நிலையத்தில் காணலாம்.

படத்தில் காணும் புத்தர் சிலையொன்று இப்போதும் இங்கேயே இருக்கிறது. இதனை 'விரும தேவன்' என இப்பகுதி மக்கள் வணங்குகின்றனர். இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தினுல் மேலும் பயனுள்ள செய்திகள் கிடைக்கலாம். விராம்பட்டினம் கோயில் திருவிழா ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் நடைபெற்று வருகிறது.

முத்தால்பேட்டை

இவ்வூர் புதுச்சேரிக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. கைத்தறித் தொழிற்கு இவ்வூர் பெயர்போனது. இங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் நெசவாளர்கள். இங்கிருந்து கைத்தறித் துணிகள் மலேயா, சிங்கப்பூர் பர்மா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இங்கு நடைபெறும் திருவிழாக்களில் '' சூரசம்மாரம் ''சிறப்புடையது.

சித்தாந்தச்சாமி மடம்

இம்மடம் முத்தால்பேட்டைக்கு மேற்கே சிறிது தூரத்தில் உள்ளது, இங்குச் சித்தானந்தச்சாமி சமாதி இருக்கிறது. ஆண்டுதோறும் குருபூசை நடைபெறும். கவி. சுப்ரமணிய பாரதியார் இக்கோயிலைப்பற்றி

'' சித்தாந்தச்சாமி திருக்கோயில் வாயிலில்
தீபவொளியுண்டாம்!—பெண்ணே!
முத்தாந்த வீதி முழுதையுங் காட்டிட
மூண்ட திருச்சுடராம்;—பெண்ணே!''

என்று தொடங்கி நான்கு பாடல்கள் பாடியுள்ளார்.

கருவடிகுப்பம்

இஃது இம்மடத்திற்குச் சற்றுத் தொலைவில் உள்ளது இங்கு அழகிய உல்லாசமனை (Bangalow) ஒன்று உண்டு. இது புதுச்சேரியில் வாழ்ந்த ஆரோக்கியசாமி முதலியார் என்னும் பெரும் செல்வருடையதாகும். இதன் அமைப்பு பார்த்து மகிழ்தற்குரியது.

இப்பகுதிகளில்தான் பாரதியார் அடிக்கடி வந்து உலவுவது வழக்கம், இச்சோலையைப் பற்றிப் பாரதியார் தன் " குயில் பாட்டில் "

" வேகத்திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின்
மேற்கே, சிறு தொலையில் மேவுமொரு மாஞ்சோலை;
நாற்கோணத்துள்ள பல நத்தத்து வேடர்களும்
வந்து பறவை சுடவாய்ந்த பெருஞ்சோலை:"

என்று குறிப்பிடுகிறார்.

இப்பகுதியிலிருந்து தான் " கண்ணன் பாட்டு " பிழைத்த தென்னந்தோப்பு " குயில் பாட்டு " முதலிய பாடல்களைப் பாடினார். அத்துணை இயற்கை எழில் வாய்ந்தது.

பொம்மையார்பாளையம்

இவ்வூர் புதுச்சேரிக்கு வடக்கே சில கல் தொலைவில் உள்ளது. இங்கு இப்பொழுதும் சைவ மடம் உண்டு. இம் மடத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் பல நாள் தங்கியிருந்தார். " பிரபுலிங்க லீலை " என்னும் உயரிய காவியம் பாடியருளியவர் இவரே !

குயவர்பாளையம்

இவ்வூர் புதுச்சேரிக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ள ஊர். இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர்

அழகிய மண் பொம்மைகள் செய்பவர்கள். இங்குச் செய்யப்படும் பொம்மைகள் உலகப் புகழ் வாய்ந்தவை. மேனாட்டாரால் பாராட்டுப்பட்டு வழங்கிய பத்திரங்களையும், தங்கப் பதக்கங்களையும் இன்றும் பல வீடுகளில் காணலாம்.

சாரம்

இதனையடுத்துள்ள சாரம் என்னும் சிற்றூர் இங்கு, சிறந்த புலவரான பு. அ. பெரியசாமிப் பிள்ளையவர்கள் வாழ்ந்துள்ளார்.

கதிர்காமம்

சாரத்திற்கு மேற்கே 2 கல் தொலைவில் உள்ளது கதிர்காமம். இங்கு நெசவுத் தொழில் எப்பொழுதும் உண்டு. தற்பொழுது தீப்பெட்டித் தொழிலும் நடைபெறுகிறது. இங்குள்ள மாரியம்மன் கோயிலுக்கு ஆண்டுதோறும் "செடல் விழா" நடைபெறும். இவ்விழா இப்பகுதிக்குச் சிறப்பானது.

முத்திரைப்பாளையம்

இவ்வூர் கதிர்காமத்திற்கு இன்னும் மேற்கே 2 கல் தொலைவில் உள்ளதாகும். இவ்வூரே புதுச்சேரிக்கு மிக முக்கியமானதாகும். இங்கு உற்பத்தியாகும் குடி நீர் மிக உயர்ந்தது. எங்கும் கிடைக்காதது. இங்குப் பல ஆண்டுகட்கு முன்னர் "ஆய்" என்னும் கணிகை யொருத்தி வாழ்ந்திருந்தாள். ஒரு நாள் மாலை நேரம். அவ்வழியாக அரசன் ஒருவன் யானை மீதமர்ந்து தன் பரிவாரங்களோடு புதுச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்தான் அவ்வமயம் "ஆய்" மனை வாயிலில் நாற்புறமும் அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அது கண்ட மன்னன், ஆலயம் என்று கருதி, இழிந்து வாயில் நோக்கி விழுந்து கும்பிட்டான். இதைக் கண்ட அயலார் ஆய் கணிகையிடம் கூறி

னர். கணிகை மிகவும் மனம் வருந்தி மன்னனிடம் மன்னிப்புக் கேட்டாள். அந்நிகழ்ச்சியின் கழுவாயாக ஏழு நீர் நிலைகள் தோண்டினாள். அதுவே முத்திரைப்பாளையம் நீர் நிலையாகும். அவள் தங்கை ஊசி என்பாள் இன்னுஞ் சற்றுத் தொலைவில் பெரியதொரு ஏரி வெட்டினாள். அதுவே ,' ஊசி இட்ட ஏரி''யாகும் அது மருவி '' ஊசிட்டேரியாக'' வழங்குகிறது. இது புதுச்சேரி நீர்ப்பாசனத்திற்குப் பேருதவியாக உள்ளது.

முதலியார்பேட்டை

இவ்வூர் புதுச்சேரிக்குத் தெற்கே கடலூர் செல்லும் பாதையில் உள்ளது. இங்கு வாழும் மக்கள் அனைவரும் பஞ்சாலைத் தொழிலாளிகள். இங்கு இரண்டு நெசவு ஆலைகள் உள்ளன. அவைகளில் ஏறத்தாழ 5000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

அருகன்குப்பம் (அரியாங் குப்பம்)

இவ்வூரும் அதே பாதையில் மூன்று மைல் தொலைவில் உள்ளது. இது இப்பொழுது '' அரியாங்குப்பம்'' என்று வழங்குகிறது. இவ்வூர்ப்புறத்தேதான் '' அருகன்மேடு'' என்னும் சரித்திரப் புகழ் வாய்ந்த இடம் உள்ளது. இங்குள்ள மாதாக் கோயில் பார்க்கத் தக்கது.

உப்பளம்

இஃது புதுச்சேரிக்குத் தெற்கே மிக அண்மையில் கடற்கரையோரமாக உள்ளது. ஆங்கிலேயர்களிடம் பிரஞ்சுக்காரர்கள் உப்புக் காய்ச்சும் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்வதற்கு முன் இங்குத்தான் உப்புக் காய்ச்சப்பட்டது. இங்கு உள்ள '' முத்துமாரி ''யம்மனைப் பற்றி, கவி பாரதியார் '' முத்துமாரி '' என்ற தலைப்பில்,

": உலகத்துநாயகியே! எங்கள் முத்து!
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!
உன்பாதம் சரண்புகுந்தோம்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி!"........

என்று தொடங்கி மிக உயர்ந்த பாடலைப் பாடினர்.

நல்லாற்றூர்

இவ்வூர் புதுச்சேரிக்குத் தென் மேற்கில் 10 மைல் தொலைவில் உள்ளது, இங்குத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் சமாதி உள்ளது. இங்கு ஆண்டுதோறும் குருபூசை நடைபெறும். அவ்வமயம் பல புலவர்களும் அறிஞர்களும் கலந்து கொள்வர்.

வில்லியனூர்

புதுவையிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ள இயற்கை வளஞ் சூழ்ந்த சிற்றூர் இது. வெற்றிலைத் தோட்டமும் கரும்புத் தோட்டமும் ஏராளமாக உண்டு.


"பளிங்ககப் படுத்துநீண்ட பரப் பெல்லாம் பவளக்குப்பை
விளங்கு செஞ் சுடரின் கற்றை விம்மு பாற்கடல் வா யெங்கும்
தளங்கடி கமழப் பூத்த தடமலர்க் கமலக் காட்டின்
வளங் கொடுகிடந்த முன்றின் மனைதோறு மெறிப்பக் கண்டாள்"

இவ்வாறு இவ்வில்லியனூரை வில்லைப் புராணம் கூறி சிறப்புறுத்துகிறது.

வில்லைப் புராணம் வீரராகவ கவி என்பாரால் எழுதப் பெற்ற தல புரணம் ஆகும்.

வில்வ நல்லூர் என்றும் காமீசம் என்றும் இவ்வூருக் குப் பெயர் கூறுவர்.

12வது நூற்றுண்டில், கம்பர் காலத்து மூன்ருவது குலோத்துங்க சோழனல் கட்டப்பட்ட கோயில் இவ்வூரில்



வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோயிலும் திருக்குளமும்


உள்ளது. 'திருக்காமீசர்' எனும் பெயரில் ஈசுவரனும், 'கோகிலாம்பாள்' அம்மையும் உள்ளது. 'குயிலம்மை' எனவும் அம்மை பெயர் வழங்குகிறது,

495 செய்யுள் அடங்கிய வில்லைப் புராணம் 1825ல் எழுதப்பட்டு அதன் மூலச்சுவடி கடல் கடந்து, பிரான்சின் தலை நகரான பாரிஸில் உள்ள தேசிய நூல் நிலையத்திற் போய்ச் சேர்ந்தது. ழுலியேன் வேன்சோன் என்பாரின் உதவியால் அதனைத் தருவித்து முதன் முதலாக உ. வே, சாமிநாதையர் 1940 ஆம் ஆண்டில் பதிப்பித்திருக்கிறார்.


வில்லியனூரில் ஆனி மாதத்தில் தேர் விழா மிகச் சிறப்புற இன்னும் நடைபெற்று வருகிறது.

திருவக்கரை

இவ்வூர் புதுச்சேரி புகைவண்டி நிலையத்திலிருந்து கற்சாலையில் 11 மைலில் வானூருக்கு மேற்கே, திண்டி



திருவாண்டார் கோயில் சிற்பங்கள்





திருவாண்டார் கோயில் சிற்பங்கள்

வனம் கற்சாலேயில் 2 மைல் தொலேவில் உள்ளது. இஃது வரலாற்றுச் சிறப்புடையது. இக்கோயில் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. இது கி.பி. 6-ம் நூற்றுண்டில் கட்டப்பட்டது.

"கறையணிமாமிடற்ருன் கரி காடரங்காவுடையான்
பிறையணி கொன்றையினு னெருபாகமும் பெண்ண மர்ந்தான்
மறையவன் றலே யிற் பலிகொள்பவன் வக்கரையில்
உறைபவனெங்கள் பிரானு லியார் கழலுற்குதுமே"

என்று தொடங்கும் மூன்று தேவார 2-ம் திருமுறை, பாடல்களால் தெரியவருகிறது. இறைவன் சந்திரசேகரர். இறைவி; வடிவாம்பிகை.

திருவடுகூர்

இவ்வூர் கண்ட மங்கலம் என்று வழங்கும் சின்னபாபு சமுத்ரம் புகைவண்டி நிலேயத்திலிருந்து மேற்கே 2 மைல் தொலேவில் உள்ளது. புதுசேரிக்கு 12 மைல் தூரத்தில் உள்ளது. இவ்வூர் இப்பொழுது திருவாண்டார் கோயில் என்று வழங்குகிறது. இங்கு உள்ள கோயில் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது.

"சுடு கூரெரிமாலே யணிவர் சுடர் வேலர்
கொடு கூர்மழுவா ளொன்றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங்கவலே பிணியில்லார்
வடுகூர் புனல் சூழ்ந்த வடு கூரடிகளே"

என்று தொடங்கும் மூன்று தேவாரம் 1-ம் திருமுறை பாடல்களால் அறியப்படுகிறது.

இறைவன்—வடுகூர்நாதர். இறைவி—வடுவகிர்க்கண்ணியம்மை.

மண்டபப்பட்டு

இவ்வூர் புதுவைக்கு மேற்கே 12 கல் தொலேவில் உள்ளது- சின்னபாபு சமுத்திரம் புகைவண்டி நிலேயத்திற்குத்

தெற்கே 2 கல் தொலைவில் உள்ளது. இங்குள்ள கல் வெட்டு ஒன்று "கல், மரம். உலோகம், சுண்ணும்பு இல்லாமல் பல்லவன் கோயில் அமைத்தான்" என்று கூறுகிறது. இக்கோவிலே பல்லவன் மகேந்திரவர்மன் அமைத்த முதல் குகைக்கோயிலாகும். [கி.பி. 7–ம் நூற்ருண்டின் தொடக்கம்.]

பாகூர்

இவ்வூர் புதுச்சேரியிலிருந்து திருப்பாதிரிப்புலியூர் செல்லும் பெரும்பாதையில் 10 மைல் தொலைவில் உள்ளது. இது பல்லவர் காலத்தில் 9-ம் நூற்ருண்டுக்கு முன்னிருந்தே சிறப்புற்றிருக்கிறது. இங்குப் பெரிய கல்லூரி ஒன்று இருந்தது. 14 கலைகளும், 18 வித்தைகளும் கற்பிக்கப்பட்டன. இங்கு உள்ள கோயில் இராஷ்டிர கூடர்களால் கட்டப்பட்டது. கி.பி. 9-ம் நூற்ருண்டு பிராகிருத மொழி கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன.

புதுச்சேரியில் வாழ்ந்த புலவர்கள்

புலவர் பு. அ. பெரியசாமி பிள்ளை

இவர் அப்பாசமிப் பிள்ளை, பூரணி அம்மாள் இவ்விருவருக்கும் 1843-ல் பிறந்தவர். இவர் தன் 21-ம் வயதிலேயே கவிபுனையும் வன்மை பெற்றவர். மாணாக்கர்கட்குப்பாடஞ் சொல்லுவதில் வல்லவர். இவர் இயற்றிய இலக்கியங்கள் மயிலக் கலம்பகம், மயிலச்சிலேடை வெண்பா, மயிலத்தந்தாதி, புதுவைக் கலம்பகம், புதுவை வெண்பா, சுப்பிரமணியர் நீரோட்டயமக வெண்பா, இயற்றமிழ்ப் பாமாலை, இராமாயணச் சங்கிரகச் செய்யுள் முதலியன. 24-12-1920 ல் இயற்கை யெய்தினர். இவர் மாணவர்களில் சிறந்த புகழுற்று விளங்கும் பாவலர் பாரதிதாசனும் ஒருவராவார்.

புலவர் சி. பங்காரு பத்தர்

இவர் சித்தூர் மாவட்டத்தில் நமண்டி என்ற ஊரில்சின்னத்தம்பிப் பத்தர், கங்கையம்மை இவர்கட்கு 3-2-1871-ல் பிறந்தவர். இவர் தமிழும், தெலுங்கும் பயின்றவர். பின் புதுச்சேரியைச் சார்ந்து பெரும் புலவர் பு. அ. பெரியசாமி பிள்ளையிடம் பாடங்கேட்டுச் சிறந்த புலவரானர். பின்பு அரசினர் கல்லூரியில் ஆசிரியாராகப் பணியாற்றினர். 1912-ல் இவர் 'கலைமகள் கழக'த்தை நிறுவினர். 1922.ல் விஸ்வகர்ம சபை ஒன்று நிறுவினர். 20-2-25-ல் இயற்கை யெய்தினர்.

இவர்கட்கு முற்பட்ட காலத்தவராக ருக்மாங்கத சரித்திரம் இரண்ய நாடகம் எழுதிய வெண்பாப்புலி கோவிந்தசாமிப் பிள்ளை, புலவர் பெரியசாமிப் பிள்ளை உடன் பிறந்தார் பொன்னுசாமிப் பிள்ளை, இவர்களின் ஆசிரியர் நாகலிங்கசாமி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

முதன் முதலில் மநுதர்ம நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவரும் புதுச்சேரி முத்துரங்க சேஷாசல செட்டியார் என்பதும்,

கோபாலகிருஷ்ண பாரதி இயற்றிய நந்தனர் சரித் திரம் ஊர்தோறும் தெருக்கூத்தாக நடிக்கப்பட்டு வந்ததை நேரில் கண்டு புத்தக உருவில் வெளியிட்டு உதவியவர் காரைக்காலில் மாஜிஸ்டிரேட்டாக இருந்த ஒரு பிரஞ்சுக் காரர் என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்வாறு புலவர்களும் புரவலர்களும் வதிந்த பெருமைசால் புதுவை கடந்த சில ஆண்டுகளில் கவியரசர் பாரதி, அறிஞர் அரவிந்தர், வ. வே. சு. ஐயர், வழக்கறிஞர் துரைசாமி ஐயர், புரட்சிவீரர் மாடசாமி, சுப்பிரமணிய சிவா போன்றோரையும் அவர்களின் தோழர்களையும் வர வேற்றுக் காத்து வந்திருக்கிறது.

அடைக்கலம் தந்த புதுவை, பேரிலக்கியம் பல வெளி வர உதவியிருக்கிறது. கவியரசர் பாரதியார் 1908–ஆம் ஆண்டில் புதுவை வந்து சேர்ந் தார். உயரிய தனிக் கவிதைகள், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, கனவு, கீதை முதலிய பெருங்காப்பியங்கள் புதுவையிலே மலர்ந்தன. இவரைக் காத்து, வளர்த்து, இலக்கியம் சமைக்க உதவியளித்த பெரும் புரவலர்கள், உயிர்த் தோழர்கள் இன்றும் உளர். அவர்கள் அனைவரும் நம் பாராட்டுக் குரியவர்கள்.



அரவிந்தர் இந்தியத் துணைக் கண்டத்தின் வடகிழக்கு மூலையினின்று தென்னாட்டின் ஒரு பகுதிக்கு அடைக்கல மாக வந்து சேர்ந்தார் 4—4—1910-ஆம் ஆண்டு.

அவருக்கு எல்லா வசதிகளும் அளித்து ஓராண்டுவரை இருக்க இடமும் தந்து போற்றினர் கல்வே சங்கர செட்டி யார் அவர்கள்.

ஒற்றர் வருவதை அறிதற்கு மேல் மாடத்தில் சிறு சன்னல்களும், மேல் மாடியறைக்கும் கீழ்ப் பகுதிக்கும் பேச்சுத் தொடர்பு கொள்ள ரகசியமான திறப்புச் சுவர் அலமாரிகள் அமைத்தும் அரவிந்தர் பலவகையிலும் பாது காக்கப்பட்டார். இன்றும் வைசியர் தெரு 39-ஆம் எண் மேற்கூறிய சங்கர செட்டியார் இல்லத்தில் இந்த அமைப் புக்களை கண்டு மகிழலாம்.

ஆங்கில அடக்குமுறை ஆட்சியை எதிர்த்துப் போராடிய தலைவர்கள் புதுச்சேரி நண்பர்களால் பாது காக்கப்பட்ட விவரமும்,

சுதேசிகள் என அழைக்கப்பட்ட பாரதியும், அரவிந் தரும் ஏனையவரும், ஆங்கிலரிடம் ஒப்படைக்கப்பட வேண் டியவர்களே எனும் தீர்மானம் பிரஞ்சு அரசின் முன்பு வரும்போது, ஆலோசகர்களின் மனைவியர்க்கு எழுதிய விண்ணப்பத்தால், முடிவு மாற்றப்பட்டு, அவர்கள் காப் பாற்றப்பட்ட வரலாறும்,

பிரான்சும்—இங்கிலாந்தும் செய்துகொண்ட உடன் படிக்கைப்படி, பிரஞ்சுப் பகுதிகள் ஆங்கிலர் வசமாகும் நேரத்தில் அந்த முடிவை எதிர்த்துப் பாரதி நடத்திய கிளர்ச்சி வரலாறும்,

அரவிந்தர், பாரதி, வ. வே. சு. ஐயர் இவர்களுடன் மேனாட்டிலிருந்த அறிஞர் எம். என். ராய் கொண்டிருந்த தொடர்பு வரலாறும் நாம் கேட்குந் தோறும் வியப் பளிக்கும் செய்திகள் அல்லவா?

அரசியல் அறிஞர்கள்

ஆநந்தரங்கப் பிள்ளை

கி. பி. 18-ம் நூற்றுண்டில் பிரஞ்சுக்காரரின் வணிகத் துறையும் அரசியல் துறையும் புதுச்சேரியிலும், தென்



னிந்தியாவிலும் விரிவடைந்தது. இவ் வளர்ச்சிக்குப் பெருந் துணையாயிருந்தவர்கள் அவ்வமயம் வாழ்ந்த சில தனவந்தர்களாவார்கள். அவர்களில் வள்ளலாகவும், அரசியலறிஞராகவும் விளங்கிய ஆநந்தரங்கப் பிள்ளையவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

1704-ம் ஆண்டில் ஆநந்தரங்கப்பிள்ளையின் மாமனுகிய நைனியப் பிள்ளை என்பவர் பிரஞ்சுக்காரரின் தலைமை ஏஜண்டாக நியமிக்கப்பட்டார்.

31-12-1706-ல் மர்த்தேன் என்பவர் பாரிஸிலிருந்து புதுச்சேரிக்குத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் 30-3-1709-ல் ஆநந்தரங்கப்பிள்ளை அவர்கள் பிறந்தார். பிறகு 1716-ஆம் ஆண்டில் பிள்ளையவர்களின் தந்தையான திருவேங்கடப்பிள்ளையைப் பிரஞ்சு அரசினர் புதுச்சேரிக்குத் தலைமை ஏஜண்டாக நியமித்தனர். நைனியப்பிள்ளை நீக்கப்பட்டார். சிறையிலும் அடைக்கப்பட்டார். 1717-ம் ஆண்டில் நைனியப்பிள்ளை புதுச்சேரி சிறையில் இறந்து பட்டார்.

நைனியப் பிள்ளையின் மகன் பாரிஸ் சென்றவர் 1722-ல் கிருஸ்துவராக மாற்றப்பட்டு. தலைமை ஏஜண்டு அதிகாரமும் பெற்றுத் திரும்பினர். ஆனல் இயற்கை விட

வில்லை. 1723-ல் மரணமடைந்தார் அவர். திருவேங்கடப் பிள்ளையும் 1726-ல் இயற்கை யெய்தினர். நிற்க.

18-9-1735.ல் துய்மா என்பவர் கவர்னராகப் பிரான்சிலிருந்து வந்தார். இவர் பெயரால் புதுச்சேரியில் ஒரு தெருவுண்டு.

6-9-1736-லிருந்து ஆநந்தரங்கப்பிள்ளையவர்கள் நாட்குறிப்பு (டைரி) எழுத ஆரம்பித்தார். இக்குறிப்புக்களிலிருந்து அக்காலத்திய பிரஞ்சு ஆட்சியில் நடைபெற்ற பல சம்பவங்கள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. இக்குறிப்பின் கையெழுத்துப் பிரதி இன்றும் புதுச்சேரி பொது நூல் நிலையத்திலுள்ளது.

14-1-1742-ல் பிரஞ்சிந்திய ஆட்சியில் பெரிய சேவையும், திருத்தமும் செய்த மாபெரும் வீரன் துய்ப்ளேக்ஸ் புதுச்சேரிக்கு வந்தார். இவ்வருகைக் காட்சி கல்லில் செதுக்கப்பட்டு, கடற்கரையோரத்திலுள்ள இராணுவ வீரர்களின் நினைவுச் சின்ன மண்டபத்தின் பின்புறம் அமைக்கப்பட்டிருக்கிறது. மிக உயர்ந்த சிற்பமாகும். இவர் காலத்தில் தான் ஆநந்தரங்கப் பிள்ளையவர்கள் 1749-ம் ஆண்டு தலைமை ஏஜண்டாக நியமிக்கப்பட்டார்.

1752-ம் ஆண்டில் சந்தா சாயபு திருச்சியில் கொலை செய்யப்பட்டான். அதே ஆண்டில் ஆகஸ்டு மாதம் பிரஞ்சுக்காரர்களால் துய்ப்ளேக்சுக்கும், ஆநந்தரங்கப் பிள்ளைக்கும், அவர் மகனுக்கும் மிகப் பெரிய கவுரவப் பட்டம் வழங்கப்பட்டது. அவ்வமயம் பிள்ளையின் மீது சீனுவாசக் கவி என்பவர் பதிகம் பாடியுள்ளார்.

2-8-1754-துய்ப்ளேக்ஸ் பிரான்சுக்கு அழைக்கப்பட்டான். 1748-ல் அடித்த பெரும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உறையுள் தந்துதவிய பெருமை பிள்ளையவர்களுடையதாகும்,

12-1-1761-ல் ஆநந்தரங்கப்பிள்ளை இயற்கை யெய்தி ஞர். ஆனந்தரங்கப் பிள்ளையைத் தவிர, தானப்ப முதலி யார், கனகராச முதலியார், முதலிய அரசியல் அறி ஞர்களும்.

நீதித்துறை ஆலோசகராகப் பணியாற்றிய நிடத ராஜப்பய்யா,

திவான் கந்தப்ப முதலியார், அப்பாவுப் பிள்ளை, மணியம் அழகப்பிள்ளை போன்ற ஆலோசகர்களும், அதி காரிகளும் பணியாற்றியதும் திருமுடி நடராஜ செட்டி யார், கல்வே சுப்பராய செட்டியார், கல்வே சங்கர செட் டியார் போன்ற பெருமக்களும் வாழ்ந்த புதுவை சிறப்புக் குரியதன்ரு?

கல்வே சுப்பராய செட்டியார் நினைவாகக் கல்வே கல்லூரி இன்றும் புகழ் ஒளி பெற்று வருகிறது.

திருமுடி நடராஜ செட்டியாரின் புதல்வர் சேதுராமன் அவர்கள். இப்போது புதுவையின் துணை மேயராக உள் ளார். புதை பொருட்களும், அரிய சிற்பங்களும், படங் களும், பழங்காலக் கருவிகள் முதலிய வியத்தகு பொருட் களை இன்றும் அவர் இல்லத்தில் பாதுகாத்து வருகிருர். இவை யனைத்தும் கண்ணுக்கும் கருத்துக்கும் அரும் விருந்தாகும்.

வந்து சென்ற பெரியோர்கள்

வடலூர் இராமலிங்க சுவாமிகள்

புதுச்சேரிக்குத் தெற்கே உள்ள வடலூர் என்னும் ஊரில் அடக்கமாயுள்ள வள்ளலார். இவர் தன் சுற்றுப் பயண காலத்தில் புதுச்சேரி விசுவநாதய்யர் வீட்டில் சில நாள் தங்கியிருந்து பாடஞ் சொல்லியிருக்கிறார். மற்றொரு சமயம், புதுச்சேரி தந்தி அலுவலகத் தலைவர் பினாகபாணி முதலியார் எட்டு மொழியில் வல்லவர்; அவரை ஊமை யாக்கி அவர் ஆணவத்தை அடக்கியிருக்கிறார் அடிகளார்.

1935-ஆம் ஆண்டில், அரிஜன சேவா சங்கத்தின் அழைப்புக் கிணங்க உலகப் பெரியார் காந்தி இங்கு வந்து சொற்பொழிவாற்றிச் சென்றார். அடுத்த ஆண்டில் நேரு வந்தார். 1881-ஆம் ஆண்டில் லாலா லஜபதி ராய் புதுவை வந்தபோது பேசுவதற்குத் தடை விதிக்கப் பட்டது. சி. ஆர். தாஸ், ஆந்திர கேசரி பிரகாசம், விவேகானந்தர், தாகூர், சரோஜினி நாயுடு, பத்மஜாநாயுடு, ராஜாஜி, சீனிவாச அய்யங்கார், ஹரீந்திரநாத் சட்டோ பாத்தியா போன்ற அறிஞர்கள் இங்கு வந்து பேசியும், பலகாலம் தங்கியிருந்தும் போயினர்,


இசைவாணர்களான, மிருதங்கம் அழகநம்பி, மான் பூண்டியா பிள்ளை, தட்சணாமூர்த்திப் பிள்ளை, வீணை சேஷண்ணா, குழல் சரபசாஸ்திரி, மகா வைத்தியநாதய்யர், தஞ்சை நாராயணப்பா, திருக்கோடி காவல் கிருஷ்ணய்யர் ஆகியோரும், நாராயணசாமிப் பிள்ளை, சீனுவாசப் பிள்ளை நடத்திய நாடக கழகங்களும், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பனியும் இங்கு வந்து தங்கள் திறமையைக் காட்டிப் புதுவை மக்களை மகிழ்வித்திருக்கின்றனர்.

நாடகப் புலவர் சங்கரதாஸ் சுவாமிகள் புதுவையில் காலமானார். இவரது சவம் கருவடிக் குப்பத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இப்போது அங்கே அவரது நினைவுச் சின்னமும் எழுந்துள்ளது.

வாழும் புலவர்:
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இன்று தமிழ் நாட்டுக்கே தனிப்புகழ் தந்து கொண்டிருக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (கனக சுப்புரத்தினம்) அவர்கள் புதுவையிலே பிறந்து வளர்ந்து அரசினர் பள்ளி ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார்.

1891 ஏப்ரல் மாதம் 29-ஆம் நாள் புதுவைப் பெரு வணிகர் கனகசபை அவர்களின் மகனுய்ப் பிறந்த பாரதிதாசன், தம் பதினெட்டாவது வயதில் ஆசிரியரானுர். பாரதியுடன் பத்தாண்டுகள் பழகியவர். அத்துடனின்றி



புதுவையில் அடைக்கலம் பெற்றிருந்த புரட்சியாளர் அத்தனை பேருக்கும் உயிர் காக்கும் தோழராக, உண்மைத் தொண்டராக இருந்தவர்.

'சுப்பிரமணியர் துதியமுது' எனும் ஆத்திகப் பாடல் தொகுதி வெளியிட்டபோது தீவிர பக்தராக இருந்தவர். பின் 'கதர் ராட்டினப் பாட்டு' இயற்றி வெளியிட்ட போது தீவிர கதர்த் தொண்டர். 1928-ம் ஆண்டுக்குப் பிறகு இன்றைய திராவிட இயக்கத்தின் 'தாய்' ஆகிய சுயமரியாதை இயக்கத் தொண்டராக, தனிப் பெருங் கவிஞராக, அதன் பிரசாரத் தலைவருள் ஒருவராக இருந்து வருகிறார்.

1946-ம் ஆண்டில் தமிழ் நாடு அவரின் தொண்டைப் போற்றிப் பொன்னுடை போர்த்திப் பொற்கிழி அளித்தது. புதுவையின் அரசியல் வாழ்வில் பெரு விருப்புடன் பங்கேற்று அவ்வப்போது பொது நலனுக்குப் போராடி வந்து, 1955-ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவை ராஜ்யத் தேர்தலில் புதுவை நகர காசுகடைத் தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சுமார் முப்பது நூல்களும் தனியே ஏராளமான தீஞ்சுவைக் கவிதைகளும் இயற்றிப் பெரும் புகழ் பெற்றிருக்கிறார். இதுபோது திருக்குறள் நூலுக்குப் புரட்சியுரை எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவரது இல்லம் புதுவை பெருமாள் கோயில் தெருவில் உள்ளது.

இவரின் வழியொற்றி எழுந்த மாணவர்களில் சிவப் பிரகாசம் 'வாணிதாசன்', 'அழகன்', 'தமிழ் ஒளி' மற்றும் பலர் சிறந்த கவிதையாற்றும் திறமை பெற்றவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

பிரஞ்சு இலக்கியத்தைத் தமிழில் தந்தும், தமிழ் இலக்கியத்தினை நன் முறையில் பிரஞ்சு மொழியில் பெயர்த்தும் எழுதி வரும் புலவர்களும், வரலாறு, நில நூல், இயற்கை நூல், முதலிய பாட நூல்கள் எழுதி உதவிய பேராசிரியர்களும் புதுவையிலே மிகப் பலர் உளர்.

முன்னேற்றப்பாதையில்!

1954-ஆம் ஆண்டு நவம்பர் முதல்நாளில், இந்திய அதிகாரிகள் புதுச்சேரி ராஜ்ய அலுவலகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இந்திய—பிரஞ்சு அரசாங்கங்களின் உடன்படிக்கையின்படி, கல்வி, மருத்துவம், நீதி ஆகிய துறைகள் பிரஞ்சு முறையிலேயே, தனியே பிரஞ்சு அரசாங்க ஒத்துழைப்பிலேயே இயங்கிவரலாயின.

ஏனைய பிரிவுகள் இந்திய அமைப்பு முறைகளைப் பின்பற்றி மாறுதல் செய்யப்பட்டன. இணைப்புக்கு முன்னர் ஏற்படாதிருந்த முக்கிய சில துறைகள் அறிமுகப்படுத்தப் பட்டன. உடனடியாகச் செயல்படவும் துவங்கின. கூட்டுறவுத்துறை, மீன்துறை, சமுதாய நலத்திட்டம், தேசிய விரிவுத் திட்டம், பெண்கள் நல்வாழ்வுத் துறை ஆகியவை குறிப்பிடத்தக்கன.

ஹைகமிஷனரின் உதவி அதிகாரிகளாகச் செயலாளர்கள் அலுவல் பகுதி விரிவடைந்தது.

செய்தித்துறை, பொதுமக்கள் தொடர்பு அலுவலகமாக இயங்கலாயிற்று. நிருவாகச் சிக்கலை நீக்க, அரசியல், பிரதிநிதிசபை, மருத்துவம் ஆகிய முப்பிரிவுச் செயலாளர் நியமிக்கப்பட்டார். பிரஞ்சு கல்லூரித் தலைவர் அதிகாரத்திலிருந்த கல்வித்துறை தனியாக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரி தனித்தியங்கலாயிற்று.

'இன்ஸ்பெக்டர் ஜனரல்' தலைமையில், துணை அதிகாரிகள் உட்பட, 'கிரைம் பிராஞ்சு'ப் பிரிவு, புதுச்சேரி ஆயுதப் படை முதலியன ஏற்பட்டன.


வருமானத்துறை பல பிரிவுகளாகி, கணக்குத் தணிக்கை, பணம் கொடுக்கும் அலுவலகம் தனித்தனி செயல்படலாயிற்று.

இவ்வாறு முறை மாறுதலுக்கு ஏற்ப, அலுவலகங்களின் இருப்பிடமும் மாறின.

இந்திய அரசாங்கத்தின் துணை நிதித்திட்டமும், ஐந்தாண்டுத் திட்டமும் உடனடியாகத் தீட்டப்பட்டு சீர்திருத்தங்கள் விரைந்து நடந்து வருகின்றன.

அவற்றின் சுருக்கம் இங்கே தருவோம்:

முதலாவதாக குறிப்பிடத்தக்கது **மருத்துவக் கல்லூரி.** இது இந்திய அரசாங்கத்தின் மருத்துவத்துறை மந்திரியின் நேரடிப் பார்வையில் உள்ளது. பிரஞ்சு—ஆங்கிலம் ஆகிய இரு மொழியிலும் போதனை நடக்கிறது. எம். பி. பி. எஸ். பட்டப் படிப்புக்குரிய வகுப்புகள் நிகழ்த்தப்



மருத்துவக் கல்லூரி

பெறுகின்றன. துவக்க ஆண்டில் இருபது மாணவர்களுடன், பழய முதல் நீதிமன்றக் கட்டிடத்தில் வகுப்புகள் நடைபெற்றன. கட்டிடச் சீரமைப்புக்காக 1956-57ம் ஆண்டில் ரூபாய் இரண்டரை லட்சம் நிதி ஒதுக்கப் பட்டது. மாணவர்க்கும், ஆசிரியர்க்கும் விடுதிகள் வசதியுடன் 'கோரிமேடு' எனும் பகுதியில் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் வேலை துவக்கும் நிலையை எய்தியிருக்கிறது. புதுப்புதுக் கருவிகள் ஏராளமாக வந்த வண்ணம் இருக்கிறது. இவ்வாண்டு (1957) ஐம்பத்திரண்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இரண்டாவதாகக் குறிப்பிட வேண்டியது புதிய துறைமுகப் பாலம்.

புதுவைக்கு அழகை அளித்தும், வாணிபத்தைப் பெருக்கியும் உதவிவந்த பழய கடற்பாலம் பயனற்றுப் போனதை அறிந்து புதிய பாலம் கட்டும் திட்டம் ஏற்கப் பட்டது.

வரலாற்றில் குறிப்பிடத்தக்க பகுதியாக அமைந்த 'ரேப்பாளையம்' என்ற பகுதி இதற்காகத் தேர்ந்தெடுக் கப்பட்டது. பம்பாய் மக்கென்சிஸ் லிமிடெட் எனும் எஞ்சினிரிங்கலை வல்லுநர்களால் கட்டப்பட்டு வரும் இத் துறைமுகம் 23—11—56ல் அப்போதைய மத்திய ரயில்வே துணை மந்திரி ஓ. வி. அளகேசனால் அடிப்படைக் கல் நாட்டப்பட்டது. சென்னை முதலமைச்சர் காமராசர் முன்னிலையில் இவ்விழா நிகழ்ந்தது. 1—2—57ல் வேலை துவக்கப்பட்டு நடக்கிறது. அண்மையில், அப்பகுதி வாழ் மக்களை வேறு பகுதிகளில் குடியேற்றும் முக்கிய அலுவல் நடந்தேறியது.

இப் பாலம் கட்டி முடிக்கப்படுதற்கு உத்தேச தேதி 1958-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆகும். முடிந்தவுடன், நாளொன்றுக்கு சுமார் பதினைந்தாயிரம் டன் சரக்கு ஏற்றுமதி நடக்கவும், பத்தாயிரம் டன் சரக்குகளைப் பாதுகாத்து

வரவும் வசதி ஏற்படும் என நம்பப்படுகிறது. இப்பாலம் கட்டி முடிக்க ஆகும் உத்தேச செலவு ரூபாய் இருபது லட்சம் ஆகும்.

மத்திய அரசாங்க சுங்கத் துறை

1954 நவம்பரில் கடற் சுங்கம் ஏற்பட்ட ஆண்டில் இருந்ததைவிட மும்மடங்கு அதிகமாக 1956-ஆம் ஆண்டு இறக்குமதி லைசென்சுகள் வழங்கப்பட்டன. அதாவது 1955ம் ஆண்டைவிட இது அதிகமாகும். இந்த ராஜ்யத்தில் இயங்கும் மூன்று நெசவு ஆலைகளும் தங்கள் தொழிலாளர்கட்குத் தடையின்றி வேலை தர, சலுகையாக 5% ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டு உத்தரவு 'வந்தது. இந்த மத்திய அரசாங்கத் துறையின் பிரிவுகளாக, இறக்குமதி கண்டிரோலர் அலுவலகம் தனியாகவும், சுங்க அதிகாரி அலுவலகம் தனியாகவும், மற்றும் சிறு பிரிவுகளாகவும் இங்கே உள்ளன.

1956 ஏப்ரல்-ஜூன் பகுதியில் சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் இறக்குமதி லைசென்சுகளும், 1957 ஜனவரி-மார்ச் பகுதியில் சுமார் பதின்மூன்றே முக்கால் லட்சம் ரூபாய்கள் இறக்குமதி லைசென்சுகளும் வழங்கப்பட்டன. இது குறிப்பிடத்தகுந்ததாகும்.

புதுவை ராஜ்ய அலுவலகங்கள்-நிருவாகத் துறைகள் பற்றி அடுத்து விவரிப்போம் :—

நிதி நிலைமை :—1957ம் ஆண்டு மார்ச் மாதம் வரை வசூலிக்கப்பட்டு கணக்கிடப்பட்ட வரிகள், வருமான வரி, மத்திய அரசின் பல துறைவரி, மின்சாரம் மற்றெல்லாம் சேர்த்து மொத்தம் ரூபாய் சுமார் ஒரு கோடியே அறுபத்திரண்டு லட்சத்துக்கு அதிகம் ஆகும். 1957ம் ஆண்டு மார்ச் வரை பல துறையிலும் செலவாகிய தொகை சுமார் ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றொரு லட்சமாகும். இந்த வரவு செலவுகள்-இருப்பு கணக்கு விவரம் ராஜ்ய

பிரதிநிதி சபையால் ஒப்புக்கொள்ளப்பட்டும் இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடனும் நிறைவேறின. கணக்குத் தணிக்கை முறையும், அரசாங்கம் கொடுக்க வேண்டிய பணத்தைச் 'செக்' மூலம் வழங்கும் முறையும் 1-8-1956 முதல் புகுத்தப்பட்டுள்ளன. நேரடி வரிகள் (வாகனம், வீடு முதலியவை) வசூலிக்கும் அலுவலகம் தனியாக இயங்குகிறது. அதேபோல், மறைமுகவரிகள் (கலால், வருமானவரி) தனிக் கட்டிடத்திலும், ஸ்டாம்பு விற்பனைப் பிரிவுடனும், விற்பனையின் பேரில் வசூலிக்கும் வரிவசூல் பிரிவுடனும் இயங்கி வருகிறது.

ஒவ்வோர் ஆண்டிலும் பட்ஜட் கூட்டத்தில் பிரதிநிதி சபை ஒப்புக்கொள்ளும் 'பட்ஜட்' இந்திய பட்ஜட்டின் ஒரு பகுதியாக ஏற்கப்பட்டு இந்தியப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிறது.

கல்வி

1956-57ம் ஆண்டில் 218 பள்ளிகளில் சுமார் 14,493 மாணவரும், 9298 பெண்களும் கல்வி பெற்றனர். இது 1293 மாணவர் அதிகப்பட்டதைக் குறிப்பிடுவதாகும். உயர் தரக்கல்வி 1835 மாணவர்க்கும் 610 மாணவியர்க்கும் அளிக்கப்பட்டன. உயர்தரப் பள்ளிகள் 23ஆக உயர்த்தப்பட்டன. 29 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன.

ஆசிரியர் பயிற்சிப்பள்ளி நிறுவப்பட்டதுடன், கைத்தொழில்—ஓவியப் பள்ளி விரிவான திட்டத்துடன், துவங்கி 40 மாணவர்கள் 100 மாணவர்களாக உயர்ந்தனர். பல புதுக் கருவிகளும் பொறிகளும் தருவிக்கப்பட்டதுடனும், புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தையற்கலை ஆசிரியைகள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஏராளமாக அமர்த்தப்பட்டனர். இசை கற்பிக்கவும், இந்தி கற்பிக்கவும் தனி வகுப்புகள் ஏற்பட்டன.

பிரான்சில் உயர்தரக் கல்விபெற 16 மாணவர்க்கு அளிக்கப்பட்டுவந்த நிதி உதவி புதுப்பிக்கப்பட்டதுடன், மேலும் 10 மாணவர்க்கும் அளிக்கப்பட்டன. உயர் கல்விநிதி உதவிபெற மாணவர்களும், அனுமதிக்கப்பட்டு, புதிதாக 35 மாணவர்களும் சேர்க்கப்பட்டனர். 20 மாணவர் இந்தியப் பல்கலைக் கழகல்களில் படிக்க தலைக்கு நூறு ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டனர்.

மாணவர் விளையாட்டுகட்கு பந்துகளும், கூடைப்பந் துகளும் வழங்கப்பட்டன,

பரிசோதனைக் கருவிகள். மற்றும் மரசாமான்கள் வாங்க 25 ஆயிர ரூபாய்க்கு அதிகமாக இவ்வாண்டில் செலவாகியது, இது தவிர ஏழை மாணவர்க்கு இலவச மாகப் புத்தகம் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கிறது.

1955-56 ஆம் ஆண்டில் 35 பள்ளிகளில் 6428 மாண வர்க்கும். 1956-57ம் ஆண்டில் 56 பள்ளிகளில் 7364 மாண வர்க்கும் உணவு அளிக்கப்பட்டது.

கல்வி இலாகா, புதுவையில் நடந்த ஐந்தாண்டுத் திட்ட விளம்பரக் கண் காட்சியில் இரண்டாவது பரிசு பெற்றது. இனி நகரில் உள்ள சில பாடசாலைகளைப் பற்றிய விவரம் தருவோம்,

கல்வே கல்லூரி

1875 ஆம் ஆண்டு, கல்வே சுப்பராய செட்டியாரால் கட்டப்பட்டது, அப்போது நடைபெற்ற பிரஞ்சு ராயல் காலேஜ் உள்நாட்டு மாணவரை சேர்த்துக்கொள்ள மறுத் ததால், மத உணர்ச்சி வேகத்தில் 1880 ஆம் ஆண்டுவரை குறிப்பிட்ட சாதி மதத்தினரே அனுமதிக்கப் பட்டனர், இக்கல்லூரி 1877-ம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் திறக்கப் பட்டது. அன்று முதல் இந்தப் பொதுப் பணி யைப் பாராட்டி. கல்வே சுப்பராய செட்டியார் விசேஷ

விருதுகளுடன் பவனி வர அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டார், செட்டியாரின் வழித் தோன்றல்கள் சதாசிவ செட்டியார், கிருஷ்ணசாமி செட்டியார் ஷெ கல்லூரி அரசாங்க நிறுவனமாக இயங்குதற்கு ஒப்புக்கொண்டு கட்டிடத்தையும் நன்கொடையாக, 1885 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் நாள் பிரகடனம் செய்தனர். 1918—1919 ஆண்டுகளில் மொத்தம் 386 மாணவரின், பிரஞ்சு 17 மாணவரும், தமிழ் 11 மாணவரும், ஆங்கிலம் 358 மாணவரும் பயின்றனர்.

இன்று இக்கல்லூரியின் பிரிவுகள் மூன்ருகி மூன்று மொழி வகுப்புக்கள் நடைப்பெறுகின்றன. சென்னை மாநில மெட்ரிகுலேஷன் தேர்வில் நல்ல தேர்வுப் புள்ளிகளுடன், ஏராளமான மாணவர்கள் ஆண்டுதோறும் வெற்றியுறுகின்றனர். அகன்ற வாயிலும், பெரிய கட்டிட அமைப்பும், மாபெரும் தோட்டமும் அமைந்துள்ள கல்வே கல்லூரி புதுவை நகரின் பெரியதொரு அறிவகம் எனலாம்.

மாதாகோயில் தெரு துவக்கப்பள்ளி

மிக அழகிய, வசதியான கட்டிட அமைப்புடன் உள்ளது, 1885 டிசம்பர் மாதம் 12-ம் தேதி அடிப்படைக்கல் நாட்டப்பட்டு சில காலம் பின்னர் திறக்கப்பட்டு செவ்வனே இதுவரை நடைபெற்று வரும் முதல் துவக்கப்பள்ளி இதுவாகும்.

சுய்ர்கூப் தெரு துவக்கப்பள்ளி

முன்பு கிறித்துவ மதத்துறையாக இயங்கியது, ஏழை மாணவர்க்குப் பகல் உணவு அளிக்கும் திட்டம் முற்காலத்திலிருந்தே இங்கு நடைபெறுகிறது.

பெண்கள் பள்ளி : துய்மா வீதி

வெள்ளையர்க்கு மட்டும் என 10 பிப்ரவரி 1827-ல் திறக்கப்பட்டது எனினும், 1879 செப்டம்பர் முதல்

நாளில் எல்லா சாதி மதத்தினரும் அனுமதிக்கப்பட்டனர் 1918-1919-ல் நூற்று ஆறு மாணவியர் பயின்றனர்.

பெத்தி செமினேர் கல்லூரி

கிறித்து மதச்சார்பு நிருவாகத்தில் நடைபெறுவது, புதுச்சேரியின் 'செயின் ஜோசப்' பள்ளி எனலாம். மிகுந்த கண்டிப்புடனும், அரிய கல்வியுடனும் மாணவர்கள் பயிற்றப் படுகின்றனர் ஆங்கிலப் புலமை தரும் அரிய பணி இங்குத் தனிச் சிறப்பேயாகும்,

மற்றும் சுசிலா பாய் பெண்கள், பள்ளி லப்போர்த் வீதி பெண்கள் பள்ளி, நீடத ராஜப்பய்யர் வீதி பெண்கள் பள்ளி, புசி தெரு பள்ளி, முதலியன, குறிப்பிடத்தக்கன வாகும்,

ராஜ்யத்தின் கல்வி நிலைக்குறிப்பு

துவக்கப் பள்ளிகள் மொத்தம் 219(14 பெண்களுக்கு) ஆசிரியர்கள் : 718, மாணவர் : 12500—மாணவியர் 8000 உயர்தரக் கல்விக்கூடம் : 23 (15 மாணவர்க்கு) ஆசிரியர் கள் : 80. மாணவர் : 2100; மாணவியர் 800; கலை கைத் தொழில் கல்லூரி 1. சட்டக் கல்லூரி 1. மருத்துவக் கல்லூரி 1 ஆசிரியர் பயற்சிப் பள்ளி 1. (மாணவர் : 30) பிரஞ்சு ஆங்கிலம் தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் உயர் தரக் கல்வியும், பிரஞ்சு—தமிழில் துவக்கக் கல்வியும் போதிக்கப்பபடு வருகின்றன.

இதுவன்றி பிரஞ்சுக் கல்லூரி பிரஞ்சு அரசாங்க நிருவாகத்தில் நடைபெறுகிறது. (விவரம் வேறிடத்தில் குறிக்கப்படுகிறது.)

மருத்துவத் துறை

புதுவை நகரத் தலைமை மருத்துவ விடுதி. கடற் காற் றின் இன்பமும் அமைதிச் சூழ்நிலையும் அமைந்த தலைமை



தலைமை மருத்துவ நிலையம்

மருத்துவ நிலையம் 1853-ல் நிறுவப்பட்டது. இரு சர்ஜன்கள் நியமனம் இவ்வாண்டில் நடைபெற்றது. கருத்தடை ஆலோசனைக்கு ஒருபெண்மருத்துவரும் நியமிக்கப்பட்டார், இந்திய மருத்துவ வல்லுநருடன், மற்றும் இரண்டு பிரஞ்சு நாட்டு மருத்துவரும் இப்போது பணியாற்றி வருகின்றனர். சுமார் ரூ. 74 ஆயிரத்துக்கு அதிகமான மதிப்புடைய புதிய கருவிகள் தருவிக்க ஏற்பாடு செய்யப்பட்டது இங்கே குறிப்பிடத்தக்கது, புதுச்சேரி சுற்றுப் புறங்களிலும் காரையின் சுற்றுப் புறங்களிலும் புதிய மருத்துவ விடுதிகள் திறக்கப்பட்டதோடு, மகப்பேறு நிலையம் ஏற்பட்டதும் ஒரு புரட்சிகரமான திருப்பம் ஆகும். அரசாங்க மருந்தகத்தின் உட்பிரிவு விரிவாக்கப்பட்டது. கீழ் வரும்

திட்டங்கள் மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்தவை ஆகும் :

காச நோய் மருத்துவ நிலையம் (சானிடோரியம், மருத்துவர் இருப்பிடம் முதலியவை) கட்டுதற்கு உத்தேச செலவு ரூ. 25 லட்சத்துக்கு அதிகமாகும், இந்நிலையத்திற்கு கோரி மேட்டில், 1955 ஆம் ஆண்டு அக்டோபர் நான்காம் தேதி கல்நாட்டு விழா நடத்தினர் தலைமை அமைச்சர் நேரு. இத்திட்டம் இன்னும் முடிவு பெருமல் இருப்பதைப் பார்த்து இதனை விரைவில் முடிக்கத் தம் தலையாய வேலையாக இன்றைய ஹைகமிஷனர் பாடுபடுவதாக அறியப்படுகிறது,

மருத்துவ நிலையக்கட்டிடம் விரிவுபடுத்த அடிப்படைக் கல்நாட்டு விழா 17–1–1956ல் திருமதி ராஜகுமாரி அமிருத கௌரியால் நிகழ்த்தப் பெற்றது. 200 படுக்கைகள் அதிகப்படும்படி வசதி தரும் இவ் விரிவுத்திட்டம் பெரும் பகுதி இப்போது நிறைவேறி விட்டது எனலாம். இதற்கென மத்திய அரசாங்கம் அனுமதித்த செலவு 12 லட்சத்துக்கு அதிகம் ஆகும். 40 படுக்கை வசதி அளிக்கும் மகப்பேறு நிலைய விரிவுத் திட்டத்துக்கு சுமார் ஒன்றேகால் லட்ச ரூபாய் செலவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஆக 1957-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை சுமார் 32 லட்ச ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது.

விவசாயம்

புதுவை ராஜ்ய மொத்தப் பரப்பில் 80000 ஏக்ரா நிலம் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகிறது. இங்கே காடுகள் கிடையா, 48000 ஏக்ராவுக்கு அதிகமாகத் தரிசு நிலமாகக் கிடக்கிறது. வடகிழக்குப் பருவக் காற்றின் பயனாக மழையும் காலந் தவருது பெய்துவரும் இப்பகுதியில் ஏராளமான குழாய்க் கிணறுகள் உள்ளன. நிலத்தின் உள்ளே பெருங் குழாய் இறக்கிப் பொங்கி வரும் நீரைப்

பாய்ச்சிப் பயன்படுத்தும் முறை இப்பகுதியில் மட்டுமே நடைமுறையில் இருந்தது எனலாம்.

புதுச்சேரியில் ஆண்டுக்கு 68½ அங்குல மழையும், காரைக்காலில் 59-க்கு அதிகமாகவும், மாஹேவில் 120 அங்குலமும், ஏனம் பகுதியில் 37 அங்குலமும் பெய்தது, தவிர, பிற வசதிக்கு மின்சார உதவிபெற்ற இறைப்புக் குழாய்களும் பயன்படுத்துவது அவசியமாயிற்று,

அரசாங்கம் இறைப்புக் குழாய் மோட்டார்கள் வாடகைக்கு விட்டு உதவத் தொடங்கியது.

1957-ம் ஆண்டில் மொத்தம் 8179 பவுண்டு செயற்கை உரமும், 10 டன் இயற்கை உரமும் அரசாங்கம் குறைந்த விலையில் விநியோகித்தது' இதுதவிர. பயிர்கட்கு ஏற்பட்ட பூச்சித் தொல்லைகளை ஒழிக்க, விவசாய இலாகா 8 டன்னுக்கு அதிகமான அளவு பூச்சி ஒழிப்பு மருந்துகளைத் தந்து உதவியது, பாதி விலையில் மருந்து தெளிப்புக் கருவிகளை விவசாயிகட்கு அளிக்கும் திட்டமும் செயல்படும் நிலையில் உள்ளது.

ஜப்பானிய சாகுபடி முறையை மேற்கொள்ளும்படியும், புதிய கருவிகளையும், புதிய பயிர் விதைகளையும் கையாளவும் பயிர்த் தொழில் புரிவோருக்கு எடுத்துக் காட்டி பிரசாரம் செய்யப்பட்டது. ராஜ்யத்தின் விளை பொருள்கள் : நெல், கம்பு, கேழ்வரகு, வரகு, தினை ஆகும்.

முக்கிய வருமான விளைபொருள்கள் ; மணிலா, எள், மிளகாய், பருத்தி, புகையிலை.

மொத்த உணவுப் பயிர் உற்பத்தி ; 32000 டன். நெல்—28,571 டன்; கேழ்வரகு 2,277 டன்; கம்பு : 893. வரகு: 357; தினை: 357 டன். வாய்க்கால் வழியாகவும் ஏரி வாயிலாகவும் பாசனம் ஆகும் மொத்த நிலப் பரப்பு ; 18500 எக்ரா. காவிரியால் பாசனமாகும் பரப்பு ; 29000 ஏக்ரா.

தொழில்கள்

சிறு தொழில்கள் : உற்பத்தி மதிப்பு ரூபாய் விவரம் : பவுண்டரி ரூ. 12000, நாட்டுச் செக்குகள் ரூ. 30000, விளையாட்டு சாமான் ரூ. 5000, சோப்புத் தயாரிப்பு ரூ. 12000, தீக்குச்சி ரூ. 3 லட்சம். சோடா பானங்கள் ரூ. 7 லட்சம். இயந்திரச் செக்குகள் ரூ. 10 லட்சம். பிஸ்கட் தயாரிப்பு ரூ. 3 லட்சம். கைத்தறிகள் ரூ. 20000, முந்திரித் தொழில் ரூ. 5000.

குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர் சுமார் ஆயிரம் பேர்கள்.

மாத வருமானம் ஏறத்தாழ நபர் ஒன்றுக்கு ரூ, 70.

இவை தவிர, நெசவு ஆலைகள் மூன்று புதுச்சேரியில் உள்ளன.

சவானு மில்

1829-ல் உள்ளூர்க் கைத்தறித் தொழிலுக்கு உதவியாக நூல் உற்பத்தி செய்யவும், ஏற்றுமதிக்குரிய நீலக் காங்குத் துணி நெய்யவும், ஏற்பட்ட சவானு ஆலை 1838 ல் விரிவாக்கப் பட்டது. பங்கு ஒன்றுக்கு 500 பிராங்கு வீதம் 4000 பங்காக 2 லட்சம் பிராங்கு மூலதனத்துடன் துவக்கப் பட்டது. இதுவே இப்போது சுதேசி காட்டன் மில்ஸ் என்ற பெயரில் புதிய நிருவாகத்தில் நடைபெற்று வருகிறது.

ரோடியர் மில்

(ஆங்கிலோ-பிரஞ்சு டெக்ஸ்டைல்) 1898 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

பாரதி மில்

1892 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இந்த மூன்று நெசவு ஆலைகளிலும் இப்போது 2000 தறிகளும் (லூம்) 86000 கதிர்களும் உள்ளன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இம்மூன்று ஆலைகளில் வேலை செய்து வாழ்வு நடத்தி வருகின்றனர்.

கூட்டுறவு

காலை அரும்பு முன்னே—மக்கள் துயில் கலையும் முன்னே தெருத்தோறும் மணியோசையுடன் பால்குடம் கொண்டு சைகிள்களில் விரைந்து பால் வழங்கும் காட்சி புதுவையில் 1955 க்குப் பின் ஏற்பட்டதாகும். கூட்டுறவு இயக்கம் பிரஞ்சு ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இல்லாத துறையாகும்.

பால் வழங்கும் கூட்டுறவு நிலையங்கள் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழப் பதினேரு லட்சம் சேர் பாலை வாங்கி விற்று, 765 அங்கத்தினர் கொண்டு ரூ. 15,166 மூலதனத்துடன் இயங்கி வருகின்றன. இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த சுமார் ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கும் திட்டம் கைகூடும் நிலையில் உள்ளது.

நெசவாளர் கூட்டுறவு நிலையங்கள் கடன் தந்தும் நெசவு ஆன சரக்கை வாங்கியும், விற்பனை செய்தும் நெசவாளர்க்கு உதவுகின்றன. லுங்கி, வேட்டி, கைகுட்டை, மற்றும் துணிகளும் சுமார் ஐந்து லட்ச ரூபாய் பெறுமான அளவு உற்பத்தி செய்யப்பட்டன. இம் மாதிரி ஏற்பட்ட பதின்மூன்று நிலையங்கட்கு உதவியதுடன், சாயத் தொழிற் பிரிவு, மின்சார நெசவுப் பிரிவு அடங்கிய 'மாடல் நெசவு ஆலை' கூட்டுறவு அடிப்படையில் நிறுவ சுமார் 7½ லட்ச ரூபாய் செலவிட மதிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்கான துவக்க வேலைகட்குக் கடன் உதவியும் அளிக்கப்பட்டன.

இவை தவிர, சுமார் லட்ச ரூபாய் நகை யீட்டின் பேரிலும் தனி ஒப்பந்தத்தின் பேரிலும் கடன் அளித்த

இரண்டு கூட்டுறவு பாங்குகளில் ஒன்று காரையிலும், மற்றொன்று புதுவையிலும் செவ்வனே நடந்து வருகின்றது.

கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம்: 48. அங்கத்தினர்: 5223 பேர். கூடுதல் மூலதனம்: சுமார் 8 லட்ச ரூ. 1956-57 ல் திட்டமிடப்பட்ட செலவு: சுமார் 2½ லட்சம்.

பலதுறைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இடையே, மீனவர் உதவிச் சங்கங்களும், வீடு கட்டும் சங்கமும் நிறுவப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சுமார் ஒரு லட்ச ரூபாய் கடனுகவும், சுமார் மூவாயிர ரூபாய் இலவச உதவியாகவும் ராஜ்யத்தில் உள்ள மீனவர்க்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது.

வீடு கட்டும் கூட்டுறவு நிலையத்துக்கு ரூ. 2 லட்சம், கடனுகவும், பாய் முடையும் நிலையத்துக்கு ரூ. 800 இலவச நிதியும், பொம்மைத் தொழில் நிலையத்துக்கு ஆயிரம் ரூபாய் கடனும், அளிக்கப்பட்டுள்ளன.

மீனவர் துறை

மேற்கூறிய கூட்டுறவுத் துறை உதவியின்றி, நேரடியாகவும் மீனவர் துறை புதிதாக ஏற்பட்டு, மீனவர்க்கு அரசாங்கம் உதவத் தொடங்கியது. ஆழக் கடலில் நீண்ட தொலைவுப் பயணம் நடத்தித் திரும்ப புதிய முறை வலைகள், மோட்டார் படகு, உதவும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் உள்ள நிபுணர்கள் உதவியால் சுறு மீன் பிடித்தலும், எண்ணெய் இறக்கும் தொழிலும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மாஹே பகுதியில் மீன் உலர்த்த குறைந்த விலை உப்பு விற்கவும், ஏனைய வசதிகளும் செய்துதரப்பட்டன. புதுச்சேரி சேந்திலேர் தோட்டத்தில் மீன் இலாகா அலுவலகம் புதிதாக ஏற்பட்

6

டது, சுமார் 8000 ரூபாய் செல்வில், மீன் காட்சி சாலை ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது.

புதிய தொழில்கள்

மிகக் குறுகிய காலத்தில், மிகச் சிறிய அளவில் தொடங்கப்பட்ட விளையாட்டு மரச்சாமான்கள் தொழிற்சாலை மிக விரைவில் கண்கவர் வனப்புள்ள சாமான்களைப் புதுவை மட்டுமின்றி நாடு முழுதுக்கும் விற்று நற்புகழ் சேர்த்து வருகிறது. தோல் பொருள், தோல் பதனிடும் தொழில் நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் தாமதப்பட்டு விட்டது எனினும் கைவிடப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இவை தவிர, பெரும் தொழில் நிலையங்களாக சர்க்கரை ஆலையும், சிமிண்ட் உற்பத்தி நிலையமும் மிக விரைவில் உற்பத்தி வேலைகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. எலக்ட்ரோ பிளேட்டிங் கூடமும் மோட்டார் சைகிள் உற்பத்தித் தொழிலும் ஏற்படுத்தத் தனியார் கேட்டிருந்தபடி, அவர்கள் கோரிக்கை டெல்லி அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இரும்பு, எஃகு, உருக்கு முதலியவை வழங்கவும் ராஜ்யத்துக்குரிய பங்கை ஒதுக்கித் தரவும் இந்திய மத்திய அரசாங்கம் இசைவு தந்திருக்கிறது.

மத்திய அரசாங்கத்தின் விருப்பப்படி சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரி ஒருவர் நியமித்து சிமெண்ட் வழங்க அனுமதி தரப்பட புதிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் காலனி

தட்டான் சாவடியில் 22 ஏக்கர் பரப்பு நிலம் ஒதுக்கி அதில் தொழிலர்ளர்க்கென எல்லா வசதிகளும் நிறைந்த காலனி கட்டப்பட்டிருக்கிறது. 200 குடியிருப்புகள் உள்ள இக்காலனிக்குக் 'காந்தி நகர்' என்ற பெயரிடப்பட்டது. குடியிருப்பு ஒன்றுக்கு மாத வாடகையாக ரூ. 7–8–0 வசூ

விக்கப்படுகிறது. ஒன்றினைக் கட்டுவதற்கு ரூ. 2,365 செலவாயிற்று.

'வேலைதரும் நிறுவனம்' (எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்) கடந்த 13-2-1957ல் நிறுவப்பட்டது. துவக்கிய ஆறு வாரங்களுக்குள் 530 பேர் வேலை தேடித் தம் பெயரைப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

பொதுமராமத்து இலாகா

சாலைகள் பழுது பார்க்கவும், புதிய சாலைகள் போடப்பட்டும், முக்கிய சாலைகள் தார் இடப்பட்டும் போக்குவரத்துக்கு உதவி செயப்படுதற்குப் பெரும் பகுதி இந்தத் துறையினர் உதவி செய்தனர். மேலும், ஓராசிரியர் பள்ளிகள் 51, கட்டப்பட்டன. சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் கைத்தொழில்-சித்திரப் பள்ளி கட்டி முடிக்கப்பட்டது. பத்து மருத்துவ உதவி விடுதிகளும் கட்டப்பட்டன. 1955-56ல் வேலை முடிக்காமல் விடப்பட்ட புதுவை மருத்து விடுதி வேலை முடித்து, புதிய திட்டங்களும் உருவாக்கப் பெற்றன.

1957-58ல் மேற்கொள்ளும் வேலைகளும் மதிப்பீடுகளும் கீழ்வருமாறு:

கோரிமேடு காசநோய் மருத்துவவிடுதி—13 லட்சம் ரூபாய். புதுவை மருத்துவ விடுதிச் சீர்த்திருத்தம் 6 லட்சம் ரூபாய். புதுவை மகப்பேறு விடுதி புதிய பகுதி 70 ஆயிரம் ரூபாய். இத்துடன் முதல் நீதி மன்றக் கட்டிடத்தை மருத்துவக் கல்லூரியாக மாற்றும் வேலையும், முதல் நீதி மன்றக் கட்டிட அமைப்பு வேலையும் மேற்கொள்ளப்பட்டன.

1956-57ல் முத்திரைப்பாளையம் குடிநீர்த் திட்டம் செப்பனிடப்பட்டு, முத்தால் பேட்டையிலும், நெல்லித்தோப்பிலும் புதிய குடிநீர் இறைப்பு நிலையம் ஏற்பட்டன. வீட்டு உபயோகத்துக்கு 3300 குழாய்களும், தெருவில் பொது உபயோகத்துக்கு 240 குழாய்களும் ஏற்பட்டன.

ராஜ்யத்தின் மொத்த சாலேகளின் நீளம்: 190¼ மைல்கள் (மெட்டல் சாலேகள் 82¾ மைல்கள். ஏனேய 107½ மைல்கள்) 1957-ஆம் ஆண்டு மார்ச் வரை செலவான தொகை ரூ. 17 லட்சத்து 63 ஆயிரத்துக்கு அதிகம் ஆகும்.

மின்சாரம்

ராஜ்யப் பொதுமக்களின் தேவைக்கும், தொழில் நிலேயங்களின் தேவைக்கும் ஏற்றபடி மின்சாரம் அதிக அளவு தருதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. டி. சி. பகுதிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. மொத்த மின்சார அளவில் 43 சதவிகிதம் தொழில்கட்கும், 26 சதம் நீர்ப்பாசனத்துக்கும், மிஞ்சிய பகுதி மற்ற உபயோகங்கட்கும் செலவிடப்பட்டன. 1957-ஆம் ஆண்டு 4,330 புதிய தொடர்புகள் ஏற்பட்டன.

198,9 மைல் நீள மின்சாரத் தொடர்பில் ஹைடென்ஷன் 32,63 மைல்களும், குறைந்த டென்ஷன் 166,27 மைல்களும் உள்ளன.

காந்திநகர் போன்ற புதிய குடியிருப்புப் பகுதிகட்கு மின்சார வசதி செய்ததுபோலவே, கிராமங்கள் பலவற்றில் மின்சாரத் தொடர்புகள் ஏற்பட்டன.

1955-56ஆம் ஆண்டில் ஏழே முக்கால் லட்ச ரூபாய் வருமானம் தந்த மின்சாரத் துறை, 1956–57ல் 12 லட்சத்துக்கும் அதிகமான வருமானம் தந்தது.

காரைக்கால் எலக்டிரிக் கம்பனிக்கு 2 லட்ச ரூபாய் கடன் உதவியும், வில்லியனூர் அருகில் சப் ஸ்டேஷன் அமைப்பும் நடைபெற்றன.

1957-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 23,13,200 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

1956–ஆம் ஆண்டு 88.78 லட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டன. இதில் 3634 லட்சம் யூனிட் சென்னை ராஜ்ய மேட்டூர் மின்விசையும் சேர்ந்திருக்கிறது. ராஜ்யத்தில் மொத்தம் 5,345 KW மின்சார உற்பத்தி செய்யும் நிலையம் உள்ளது.

ஏனைய அரசாங்கத் துறைகள்

தொழிலாளர் நலப்பிரிவின்கீழ் கல்வி, மருத்துவ வசதி யளிக்கவும், தொழிலாளர் குறை நீக்கத் தொழில் நீதி மன்றமும் ஏற்பாடு செய்யப்பட்டன. அரவிந்த ஆசிரமத் தொழிலாளர் வேலை நிறுத்தமும், ஏனைய ஆலைகளில் வேலை நிறுத்தமும் ஏற்பட்டபோது தொழிலாளர்நீதிமன்றத்தின் வழியாகவும், ஹைகமிஷனர் தலையீட்டின் காரணமாகவும் சமரசம் ஏற்பட்டன.

'பிளாக் டெவலப்மெண்ட்'

கிராம நலப்பிரிவு புதுச்சேரி வட்டாரத்தில் 1955 ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்டது. பயிர்த் தொழில், கால்நடை, கூட்டுறவு, மருத்துவம், கல்வி, மற்றும் உள்ளூர் வசதிகள் பற்றிய துறைகளில் இப்பிரிவு மிக முக்கிய வேலைகளைச் செய்து முடித்தது.

அவ்வப்போது சிறு சிறு கண்காட்சிகளும், போட்டி களும் ஒவ்வொரு துறையிலும் நடைபெற்றன. படிப்பகங் களும், கல்விக் கூடங்களும், மருத்துவ மனைகளும், பூங் காக்களும் ஏற்பட்டன.

மற்றும் குடிநீர்த்திட்டம், குடிசைத் தொழில், ராட்டை ஆகிய புதிய இலக்கை நோக்கி மக்களைத் திருப்பி நல்வழிகாண ஊக்குவித்தது இந்த கிராமநலத் துறையாகும்.

தேசிய விரிவுத் திட்டத்துறை, சமுதாயநலத் துறை, தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றத் துறை-ஆகியவை

முழு மூச்சில் தமது வேலைகளைச் செய்தன. தாழ்த்தப் பட்டவர்க்குக் கல்வி, மருத்துவ வசதி செய்து கொடுக்க வும்,பெண்களுக்குக் கைத்தொழில், கல்வி•புகட்டவும்,முதி யோர் கல்வியறிவு பெறவும் தனிப்பட்டோர் உதவி பெற் றும், அரசாங்க நிதியுதவி பெற்றும் ஆவன செய்யப் பெற்றன. தீண்டாமை ஒழிப்பு பற்றிய தீவிர பிரசாரம் நடைபெற்றது.

மேலே கூறப்பட்ட முக்கிய பணிகட்காக 1957 மார்ச் வரை செலவிடப்பட்ட தொகை சுமார் 32 லட்சத்துக்கும் அதிகமாகும்.

[இப் பகுதியில் தரப்பட்ட விவரங்கள் 1957-ஆம் ஆண்டு மார்ச் வரை சரிபார்த்து வெளிவந்த அரசாங்க அறிக்கைகளில் சேகரிக்கப்பட்டவை.]

புதுச்சேரி நகராட்சி

1880 ஆம் ஆண்டில் நகராட்சி முறை புதுவையில் ஏற்பட்டது. 18 உறுப்பினர்கள் உள்ளனர். மேயர் தலைமைப் பொறுப்பு உடையவர். நகரில் கிழக்கு மேற்காக அமைந்த தெருக்கள் பெரும் பான்மையும். தெற்கு வடக்கான தெருக்கள் சிலவும் நகராட்சியின் பராமரிப்புக்கு உட்பட்டவை. பொது சுகாதாரம், மக்கள் பிறப்பு. இறப்பு, திருமணப் பதிவு, கட்டிடத் தொழில் நுணுக்கம், ஆட்சி மன்ற வரி வசூல், ஆகிய பிரிவுகளாக இயங்குகிறது வறியவர்க்கு உணவு தந்து உதவும் சுப்பராயப் பிள்ளை சத்திர நிருவாகமும், சிறு நிதியுதவி அளிக்கும் ''நற்பணிக் குழு''வும் நகராட்சி அதிகாரத்தில் உள்ளன.

நகரை அழகுபடுத்தியும் தூய்மைப் படுத்தியும், ஆக்க வேலைகளில் ஈடுபாடு கொண்டும் உழைப்பவர் நகர மேயர் எச். எம். காசிம் அவர்கள். துணை மேயர்: திருமுடி சேது ராமன் ஆவார்கள். எழில் மிக்க நகர மாளிகைக் கட்டிடம் பற்றிய விவரம் பிறிதோரிடத்தில் காணலாம்.

வேறு பல அலுவல்கட்கு இடையே, நகராட்சியின் சார்பில் புதுவையில் மாபெரும் (தியேட்டர்) பொது அரங்கம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது, பொது அரங்கம் வசதியாக அமையாத குறை விரைவில் நீங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

பிரஞ்சு நிறுவனங்கள்

பிரஞ்சு பிரதிநிதி அலுவலகம்

காளத்திஸ்வரன் கோவில் தெருவின் கீழ்க்கோடியில் அமைந்துள்ளது. இந்தியப் பகுதியுடன் இணைப்புக்குப் பின் நியமிக்கப்பட்ட பிரஞ்சு அரசாங்கப் பிரதிநிதி தன் தூதர் அலுவல் மட்டுமின்றிப் பிரஞ்சு இராணுவ வீரர்கட்குச் சம்பளம் அளிக்கவும் பிரஞ்சு அரசாங்க உடைமைகளாக உள்ள கட்டிடங்களின் பர்ாமரிப்பு ஆகிய அலுவல்களைப் பார்க்கவும் அதிகாரம் பெற்றவராவார், பிரஞ்சுக் கல்லூரி, பிரஞ்சு இன்ஸ்டிடியூட் ஆகியவற்றை நிருவகிக்கும் பொறுப்பும் அவருடையதாகும்,



பிரெஞ்சுப் பிரதிநிதி அலுவலகம்

பிரஞ்சுக் கல்லூரி

இணைப்பு உடன்படிக்கையின்படி இன்னும் பிரஞ்சு ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது இக் கல்லூரி.

விக்தோர் சிமோனேல் தெருவில் தலைமை மருத்துவ விடுதிக்குத் தெற்கே யமைந்துள்ள இக் கல்லூரி, 1826-ல் "ராயல் கல்லூரி" என்ற பெயரோடு நிறுவப்பட்டது. 1848-ம் ஆண்டு முடிவில் "கலோனியல் கல்லூரி" என்ற பெயர் மாற்றம் ஏற்பட்டது.

1879-ல் உள் நாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது பிரஞ்சு முதன் மொழியாகவும், ஆங்கிலம் துணை மொழியாகவும், தமிழ் விருப்ப மொழியாகவும், போதிக்கப்படுகிறது. இலவசக் கல்வி அளிக்கும் இக்கல்லூரியில் 16 ஆசிரியர்களும் 20 பேராசிரியர்களும் பணியாற்றுகின்றனர். B. A. வகுப்புவரையில் பல துறைக் கல்வியும் போதிக்கப் படுகிறது, ஏனைய இந்தியப் பகுதியில் உள்ள கல்வி நிலையங்களுடன் தொடர்பு கொண்டு, அவற்றின் பட்டப்படிப்புக்குச் சமமாகப் புதிய வரையறைகள் ஏற்படுத்தப் பெரு முயற்சி நடைபெற்று வருகிறது,

பிரஞ்சு-இந்திய கலைக்கழகம் (இன்ஸ்டிடியூட்)

பிரஞ்சு மொழி, கலைப் பிரிவு; இந்திய ஆராய்ச்சிப் பிரிவு; விஞ்ஞான-தொழில் நுணுக்கப் பிரிவு என முப்பிரிவுகளைக் கொண்டது இந்நிறுவனம்.

முதல் பிரிவு அரசாங்க அலுவலர்களுக்கும் பிரஞ்சு மாணவர்கட்கும் உதவி செய்கிறது. பிரஞ்சு இலக்கியம் கற்கும் ஆர்வமுள்ளவர்கட்கு உதவியளிக்கிறது, இரண்டாவது பிரிவு பிரஞ்சு தூரக்கிழக்கு நாடுகளின் கல்லூரித்

தொடர்புடையது. இந்திய நாகரிகம், கலை, பண்பாடு ஆகியவற்றில் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்கிறது, மொழியா ராய்ச்சியறிஞர் பிலியோசா அவர்கள் தலைமையில் பணி யாற்றும் இப் பிரிவு தமிழ் இலக்கியங்களைப் பிரஞ்சு மொழியில் பெயர்த்து வெளியிடும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

விரைவில் தொழில் நுணுக்கப் பிரிவு செயல்படவிருக் கிறது.


இந்த நிறுவனங்களைத் தவிர, பிரஞ்சு அரசாங்க உடைமையாக இருக்கும் போர் வீரர் நினைவு மண்டபம் புதுவை நகர மாளிக்கு வடபுறம் இருக்கிறது. வானளவு புகழ் சேர்த்த வீரரை இங்குள்ள "விண்ணுயர் தூண் கள்" நினைவுறுத்துவது கண்ணுக்கும் கருத்துக்கும் இனியதாகும்!

அரவிந்த ஆசிரமம்

புதுச்சேரிக்கு வருவோர் பெரும்பான்மையினரின் கவனத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ள இந்நிறுவனம் அரசியல் மேதை-புரட்சியாளர், ஆங்கிலப் புலமை பெற்ற அரவிந்தரால் உருவாக்கப்பட்டது. வங்காளத்தில் 1910ம் ஆண்டின் துவக்கத்தில் ஏற்பட்ட ஆங்கில எதிர்ப்பு உணர்ச்சித் தீ, வெறியூட்டும் நிலையை எய்தியது. புரட்சியில் பெரும் பங்கு பெற்றவராகக் கருதப்பட்ட அரவிந்தர் புதுச்சேரிக்கு 4-4-1910 ல் வந்து சேர்ந்தார்.

அப்பொழுதைய பிரஞ்சு ஆட்சி இவர்களைப் பற்றி முதலில் கவலை எடுத்துக் கொள்ளவில்லை. பிரஞ்சிந்திய கவர்னரின் ஆலோசகராக இருக்கும் ஒருவர் சிபாரிசு இருந்தாலன்றி வெளியூர்க்காரர் புதுச்சேரியில் நிலைபெற முடியாது எனச்சட்டக் குறிப்பு இருந்ததை உணர்ந்தே, அரவிந்தர் அப்போதைய அரசாங்க ஆலோசகர் திரு. கல்வே சங்கர செட்டியார் இல்லத்தில் தங்கினர், அவருக்கு அளிக்கப்பட்ட வசதிகள்பற்றிப் பிறிதோர் இடத்தில் நாம் குறிப்பிட்டிருக்கிறோம், பாரதி வ. வே. சு. அய்யர் போன்றவர்கள் தொடர்பு சில காலம் மிக நெருக்கமாக இருந்தது. அவர்கள் புதுவையை விட்டகன்ற பின்னர் அரவிந்தர் தன்னுடனிருந்த நண்பர்களுடன், அமைதி வழி நிலையடையும் நிறுவனம் ஒன்றைத் தொடங்கும் வேலையில் ஈடுபடலானர்.

புரட்சியுள்ளம் படைத்த அரவிந்தர்—அமைப்பு முறையில் இயங்கினர். 1936-ல் அரவிந்த ஆசிரமம் தனி நிருவாகமாக்கப் பட்டது. 'அன்னை, ஆசிரம மேற்பார்வையில் ஈடுபட்டார். இப்போது மரின் தெரு 9 ஆம் எண் கட்டிடத்



அரவிந்த ஆசிரமம்

தில் தலைமை நிலையம் இருக்கிறது, மற்றும் கவர்னர் மாளிக்கு வடக்கே, கடற்கரைக்கு மேற்கே ஒரு பெரும் வட்டாரத்தில் அமைந்துள்ள பெரும்பாலான கட்டிடங் கள் ஆசிரமத்தின் உடைமைகளாகும்

பார்வையாளர் மாளிகையும், படிப்பகமும், உணவு விடுதியும் மிகப் பெரிய அச்சகமும், தொழிற்சாலைகளும் தனிப்பிரிவுகளாக இயங்குகின்றன.

சில ஆண்டுகள் முன்பு அரவிந்தர் காலமானதும். அவரின் சமாதி தலைமை நிலையத்தின் கிழக்குப் பகுதியில் வைக்கப்பட்டது. இந்த சமாதியை எல்லோரும் காண வசதி எப்போதும் உண்டு. அன்னை தரிசனம் (பலகணி யில்) காலை 6-15 மணிக்கு நாள்தோறும் உண்டு.

ஆசிரமத்தின் மற்ற பிரிவுகளைப் பார்க்க விரும்புவோர் ஆசிரமத்தின் தலைமை அலுவலகத்தில் காலை 8-30 மணிக்கு விண்ணப்பிக்கலாம். உணவு, தங்க வசதிகளும்

அங்கேயே ஏற்பாடு செய்து கொள்ளலாம். தந்தி முகவரி : **Aurobindo Pondicherry** போன் : *129, 130*,

சுமார் 15 மொழிகள் அச்சிடும் வசதியுள்ள அச்சகம் கடற்கரைச் சாலேயில் உள்ளது. போட்டோக் கலே, தோட்டக் கலே, தொழில் நிலேயங்கள், உடற் பயற்சிகள் இங்கே பார்த்து மகிழ்தற்குரியன,

சர்வதேச யூனிவர்சிடியில் வெளி நாட்டு மாணவர்க்கு இந்திய மொழிகளும், இந்தியத் தத்துவங்களும் கற்பிக்கப் படுகின்றன. ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வாழும் இந்நிறுவனத்தில், அமைதி, கட்டுப்பாடு, கலேயழகு ஒருங்கே மிளிர்வது குறிப்பிடத்தக்கது.

'அன்னே தரிசனம்' ஆண்டுக்கு நான்கு முறை நடைபெறுகின்றன.

கழகங்கள்

ரேவேய் சொசியால் சங்கம்

தாழ்த்தப்பட்டோரின் இழிநிலை நீங்குவதற்கு, உயர் திருவாளர்கள் இஸ்ராயல் எம்மானுயேல், பிரான்சின் லெசேல் இவர்கள் முன் வந்து அளித்த யோசனையின்படி உயர்திரு. ஆரோக்கியசாமி தியோமேன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டி ''ரேவேய்சொசியால்'' என்ற பெயரில் 1907ம் ஆண்டு மே மாதம் 20–ஆம் நாள் ஒரு சங்கம் நிறுவினர்கள்.

இச்சங்கம் சாதிப் பட்டங்களை நீக்க அரும்பாடுபட்டு 1937-ம் ஆண்டில் வெற்றியடைந்தது. கிராமங்களிலும், சேரிகளிலும் தன் தொண்டர்களையனுப்பி, சாதி ஒழிப்பு; கல்வி உயர்வு, சுகாதாரம் முதலியவை பற்றிப் பிரச்சாரம் செய்து வருகிறது. இப்பொழுதும் இங்கு இரவு பாடசாலை நடைபெறுகிறது. இச்சங்கம் லப்போர்த்து வீதியில் உள்ளது. 1957 டிசம்பரில் வெள்ளி விழாக் கொண்டாடியது.

கல்விக் கழகம்

புதுச்சேரியின் தென்பகுதியில் சான்றோர் வீதியில் அமைந்துள்ள '' கல்விக் கழகம் '' இளைஞர்களின் உள்ளத்தையும், அறிஞர்களின் கவனத்தையும் ஈர்ப்பதொன்ருகும்.

1912ம் ஆண்டின் தொடக்கத்தில் மாணவர் பதின்மர் '' செந்திலேர் தோட்டம் '' என்னும் அரசாங்கப் பூங்காவில் ஒன்று கூடிக் '' கல்விப் பிள்ளைகள் இணக்கம் '' என்ற பெயரோடு ஒரு கழகத்தைக் கல்வி வளர்ச்சிக்காக


வும், சிறப்பாகத் தமிழ் மொழிப் பயிற்சிக்காகவும் நிறுவி னர். இக்கழகம் வளர்மதியென வளர்வதாயிற்று. படிப் பகம், நூல் நிலேயம், இராப் பாடசாலே முதலிய உறுப்புக் களைத் தன்னகத்தே கொண்டு தொண்டு புரிந்து வந்தது. இக்கழகத்தின் சீரிய அமைப்பு அக்காலத்தில் புதுவையில் சிறந்து விளங்கிய பெரியோர்களின் அன்பையும் அருளே யும் பெறுவதற்குப் பெருந்துணை செய்தது. அப்பெரியோர் களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் திருவாளர்கள் கவிச் சக்கரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியார், வ. வே. சு. ஐயர், புலவர் சி. பங்காரு பத்தர் முதலியவர்கள் ஆவார்கள். பிறகு அரசாங்க விதிக்குக் கட்டுப்பட்டு, அதிக எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களோடு ''கல்விக் கழகம்'' என்னும் புதுப் பெயரால் அட்சய ஆண்டு சித்தி ரைத் திங்கள் ஏழாம் நாளிலிருந்து இயங்க ஆரம்பித்தது.

ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுகளாக புதுச்சேரியில் தமிழ்ப் பணியைப் பல்லாற்ருனும் செய்துவரும் கழகம் இஃதொன்றே என்ருல் மிகையாகாது,

இக்கழகத்தின் ஆண்டு விழாக்களில் அரும்பெரும் அறிஞர்கள் பங்கு கொண்டு அறிவுச் சொற்பொழிவு செய் வர். இங்குப் பயின்று சிறப்புற்ற இளேஞர்கள் பல்லோ ராவார். இக்கழகம் சிலப்பதிகார வகுப்பு, பதினெண் கீழ்க்கணக்கு மாநாடு, இலக்கண வகுப்பு மற்றும் பல இலக்கியங்களின் பேச்சுத் தொடர்கள் முதலியன நடத் திச் சிறப்புடைப் புகழுற்றது. இங்கு நூல் நிலேயமுண்டு. இரவு பாடசாலே நடைபெறுகிறது.

சொசியத்தே புரோக்ரெசீஸ்த்

இச்சங்கம் புதுச்சேரியில், காளத்திஸ்வரன் கோவில் தெருவில் 1880 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம்தேதி நிறு வப்பட்டது. புதுச்சேரி ''கலவைக் கல்லூரி''யில் தொழிற் பிரிவு அமைக்கப்பாடுபட்டது. அப்பிரிவுதான்



'சொசியத்தே புரோக்ரெசீஸ்த்' கட்டிடம்

"தொழிற் பள்ளி"யாக மாறியது. இச்சங்கத்தில் இன்றும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இச்சங்கத்திற்கு அரசாங்க மானியம் உண்டு. தனியாகவும் கட்டிடமும், நிலங்களும் இருக்கின்றன. இதற்கு நன்கொடை தந்துதவியர்களில் முக்கியமானவர்கள் பொன்னு முருகேசபிள்ளை, டி. எஸ். நன்னைய பாகவதர் முதலியோர் ஆவர்.

குறிப்பிட்ட சில குலத்தவருக்கே கல்வியளிக்கும் முறையை மாற்றி, தொழிற் கல்வி வளரவும், தாய் மொழிக் கல்வி இடம் பெறவும் ஓயாது பாடுபட்டது இக் கழகம். சொந்தமான கட்டிடத்தில், சட்டசபை போல விவாதித்து புதுச்சேரியின் கல்வித் திட்டத்தையே தயாரித்துக் கொடுக்கும் ஆற்றலுள்ள அறிஞர்கள் இந்த சங்கத்தின் உறுப்பினராக இருந்தனர்.

புதுச்சேரியில் இருந்த, இருக்கும் வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், நீதிபதிகள், அலுவல் அதிகாரிகள் பலர் இச் சங்க நிதியுதவி பெற்றுக் கற்று முன்னேறியவர்கள்.

இராமகிருஷ்ண வாசகசாலை

இது மகாத்மா காந்தி வீதியில் உள்ளது. இவ்வாசக சாலை 1933-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இவ்வாசகசாலை தேசிய வளர்ச்சியில் பேரார்வங் கொண்டு, சுதந் திரக் கிளர்ச்சியிலும், காந்திய வழிகளிலும் தொண்டு செய்து வந்திருக்கிறது, தற்போது. இலக்கியப் பணியி லீடுபட்டு அவ்வப்போது பல தமிழ் விழாக்களை நடத்தித் தமிழார்வம் புதுவையில் ஓங்கிடவும், இளஞ் சிறுர்களுக் குக் கல்வி போதித்தும், நூல் நிலையம் வளர்த்தும் வரு கிறது.

விஜயன் வித்யாலயம்

இது 1946-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கப் பட்ட ஆங்கில உயர்நிலைப்பள்ளி. முதல் வகுப்பு முதல் மெட்ரிகுலேஷன் வகுப்பு வரையில் உள்ளன. இந்நிலையம் தனிப்பட்ட ஒருவரின் பெரு முயற்சியாலேயே நடந்து வரு கிறது. மாணவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி போதிக்கிறது.

பாண்டிச்சேரி பைன் ஆர்ட் சொசைடி

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 10.ம் தேதி ஆரம்பிக் கப்பட்டது. இனிய கலை உணர்வை வளர்ப்பது இதன் குறிக்கோளாகும், மாதந் தோறும் கலை நிகழ்ச்சி நடத்தி வருகிறது,

இச்சங்கங்கள் மட்டுமின்றி, "சக்தி நிலையம்" எனும் மொழி வளர்ச்சிக் கழகமும், சாதி வளர்ச்சி பற்றி நிறுவப் பட்ட கழகங்களும், தமிழ் வளர்ச்சி கருதிப் பணியாற்றும் மன்றங்களும் புதுவையில் உள்ளன.

சுவை மிக்க செய்திகள்

வரலாற்றில் காணப்படும் குறிப்புகள்—வழிவழியாக பேசப்படும் நிகழ்ச்சிகளில் சில அவற்றின் சுவை கருதி இங்கே தொகுத்துத் தரப்படுகிறது—படியுங்கள் !

1. 1748 புதுவைப் போரில் சலியாத உழைப்புக்குப் பின் பெரு வெற்றி கண்ட துய்ப்ளேக்சுக்கு டெல்லி சக்ர வர்த்தி பல வெகுமதிகள் அளித்தான். பல்லாயிரம் ரூபாய் பெறுமான நிலம் ஊர்கள், அளித்தான், அத்துடன் அவன் அளித்த பட்டம் என்ன தெரியுமா? "கான் மன்சுபதார் நவாப்—முசாபர்சிங் பகதூர்"

2. துய்ப்ளேக்ஸ் மணந்து கொண்ட விதவைப்பெண் "வின்சான்" உள்நாட்டு மொழிகளும் பழக்க வழக்கமும் அறிந்தவள், இந்தியப் பேரரசுகளோடும் சிற்றரசர்களோ டும் அவரவர் மொழியில் பேசுவதற்கு துய்ப்ளேக்சுக்கு அவளே உதவி வந்தாள். அவளை "ஜரிணுபேகம்" எனவே அவ்வரசர்களும் சரித்திராசிரியர்களும் அழைத்த னர். சந்தாசாயபைத் தனது அரிய அண்ணன் என துய்ப்ளேக்ஸ் அழைப்பதும், 'அருமை மைத்துனர் ஜாபர் என அழைப்பதும் சாதாரணமாக வரலாறு முழுதும் காணப்படுகிறது.

3. 1741 ராகோஜி பான்ஸ்லே—புதுவைக்கு அருகே உள்ள அபிஷேகப் பாக்கத்துக்கு வந்து போனுன், புதுச் சேரிவர அந்நாள் அரசு அனுமதிக்கவில்லை,

4. 1719 கடுந்தண்டனை பெற்ற தன் தந்தையை விடு விக்கப் பிரான்சு போன நைனியப்பர் மகன் 'குருவப்பன்'

அங்கிருந்து விடுதலை உத்தரவு பெற்று கிருத்துவராகத் திரும்பினார்! சிறிது காலம் அரசாங்க ஆலோசகர் பதவி ஏற்றுப்பின் மாண்டார். அவர் தந்தையோ விடுதலை உத்தரவு வந்து சேருமுன்பே சிறையில் இறந்தார்.

5. முதன் முதலாக 1724-ல் புதுச்சேரி மக்களுக்கு வரி விதிப்பு ஏற்பட்டது, இது கோட்டைப் பாதுகாப்பு வரி" எனப் பெயர் பெற்றது,

6, பிரான்சுவா மர்த்தேன் புதுச்சேரியில் இறந்து, சவம் பிரான்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 'புஸ்ஸி' யும் இங்கேயே இறந்தான். அவன் கல்லறை இன்றும் துய்மா வீதியிலிருக்கும் N. D. ஆன்ழ் கோயிலின் தென்புற வாயிலின் நேர் எதிரே இருக்கிறது. அக்கோயிலோ 1850ல் புதுவை கவர்னராக இருந்து மரணமுற்ற காப்டன் லலாந்து கலானின் அஸ்தியின் மீது எழுப்பப் பட்டதாகும்,

7, ஏழு வயதுச் சிறுமியிடம் திருடிவிட்டுப்பின் கொலைக் குற்றம் சாட்டப் பெற்ற ரங்கசாமி என்பவன் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டான். (16-7-1861) பெரிய கடையின் நடுத்திடலில் அவனின் தலை துண்டிக் கப்பட்டது. 1825க்குப் பின் நடைபெற்ற தூக்குத் தண் டனை இதுவே. இதன்பின் எவருக்கும் இத்தண்டனை இங்கு நிறை வேற்றப் படவில்லை.

8. 1 செப்டம்பர் 1863-ல் குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேறியது. இந்த வரலாறு சுவைமிக்கது. புது வைக்கு அருகில் உள்ள முத்திரைப் பாளையம் சிற்றூரில் ஏற்றம் அமைத்து வாய்க்கால் வழியாகப் புதுவை மக்க ளுக்கு வழங்கலாம் எனத்திட்டம் அறிவித்தான் பிரஞ்சு எஞ்சினீர் '' லமேரேஸ் '', இதனை ஏளனம் செய்தனர் மற் றவர், முத்திரைப்பாளையம் மேட்டுப் பாங்கான பகுதி புதுச்சேரியோ கடல் மட்டத்துக்கும் கீழே உள்ளது, எனவே இத்திட்டம் நிறைவேறும் எனவும் கூறிச் சவால்

விட்டான்; நாள் ஒன்றைக் குறித்து அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு—பெரிய மணிக்கூண்டுக்குக் கிழ்ப்புறம் அமைந்த வாய்க்காலில் நீர் வழியாவிடில் தான் உயிர் துறப்பதாகக் கூறினான் லமேரேஸ். திட்டம் செயல் பட்டு, குறித்த நாளில் குறித்த மணியில், நீர் வழிந்தது. கவர்னர் மாளிகை எதிரேயும், மற்றும் நான்கு இடங்களிலும் திரளான மக்கள் திருவிழாப்போல் கூடிக் குடி நீர் எடுத்துச் செல்லலாயினர்.

"தங்க முத்திரைப்பானையம்,
தண்ணீர் வரும் சிங்காரம்
தன்னை மகிழ்ந்து பாராய் பெண்மயிலே"

என்று தொடங்கும் வழி நடைச்சிந்து ஒன்று இது பற்றி வழங்கலாயிற்று.

குடி நீர்த்திட்டமும் தெருவுக்கு மின் விளக்குத் திட்டமும் சென்னைக்கு முன்பே புதுவையில் ஏற்பட்டன என்பது பெருமைக்குரிய தன்றோ?

9. மணியப் பிள்ளை சத்திரத்தில் மணியடித்தால் சோறு! இப்படி ஒரு பழமொழி புதுச்சேரியில் உண்டு, தொடக்க காலத்தில் சாவடி மணியமாக இருந்த அழகப் பிள்ளை மேற்பார்வையில் நடைபெற்றது சிறை நிருவாகம். இவர் உருவச்சிலையும் இவரது மனைவி உருவச்சிலையும் இன்றும் வீராம் பட்டிணத்தில் உண்டு. இவரது மகள் உருவத்தைப் பிரதிபலிக்கும் முதல் பாவை விளக்கு தில்லை நடராசர் கோயில் உள்ளது.

10. புதுச்சேரி கோழிக்காசு நாடறிந்த செப்பு நாணயம். புதுச்சேரி இந்து சினத்து பாங்கு வெளியிட்ட ஒரு ரூபாய் நோட்டு மிகவும் எளிய அமைப்பு உள்ளது. ஐந்து, ஐம்பது ரூபாய் நோட்டுகளும் உண்டு. அவற்றை எத்தனை துண்டாகக் கிழித்து ஒட்டித்தந்தாலும் மதிப்பு உண்டு. பாங்கும் மறுக்காமல் பெற்றுக்கொள்ளும்.



ஒரு ரூபாய் நோட்டு. (முன்புறம்]



ஒரு ரூபாய் நோட்டு (பின்புறம்) தமிழ் எண்ணும்,
உறுதிமொழியும் கவனிக்கத்தக்கது.

முடிவுரை

புதுச்சேரியைப் பற்றிய முழு விவரங்களையும் படங்களோடு திரட்டித் தந்திருக்கிறோம், புதுச்சேரி வரலாறும் பெருமையும் மிகவும் விரிந்தன—இதனைப் பல்லாண்டுகளாக ஆழ்ந்து படித்தும், பலரிடம் கேட்டும் சுருக்கித் தந்திருக்கிறோம் முறையான—விரிவான புதுச்சேரி வரலாறு எழுதத் தமிழ் மக்கள் ஆதரவு தருவார்களாக.

புதுவையின் புகழ் கேளீர்!

அலைகட லோரத்தே அழகுற விளங்கும்
கலைக்கூடம் பலவும் கவினுறத் தோன்றும்
கற்றோரும் களிமயில் மங்கையரும் வணிகரும்
சொற்போர் பாவலரும் மற்போர் காளையரும்
எங்கும் காண்குவம் சங்கத் தமிழினம்
மங்காப் புகழும் மன்னும் புதுச்சேரி
தரங்கம் கிழக்காம் மேற்காம் பேருந்து
அரங்கம் புகைவண்டி நிலையம் தெற்கே
வடக்காம் சென்னை வழிப்பாலம் இஃதெல்லை
படப்பை பல்வயல் சூழ்ந்திருக் குமங்கே
உயர்மணிப் பொறிமனை மூன்றுண் டூரில்
துயர்நீக்கும் தொடுகடல் மணல்வெளி யுண்டு
ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவுக் கழகம்
காணும் கலைமுழக்கம் காதில் கேட்கும்
நெடுந்தெருவும் குறுந்தெருவும் நேர்பட விருக்கும்
படைக்கூடம் மறவர் கூட்டம் இருக்கும்
பாரதி வாழ்ந்ததும் புதுச்சேரி யன்றோ

பாரதி தாசன் பிறந்ததும் இங்கே
எங்கு மில்லை எத்தர் கூட்டம்
மங்கா தொளிரும் மணிவிளக் கங்கள்
வங்கத் துறையுண்டு வணிக வளமுண்டு
தங்க மேனியர் பஞ்சாலைத் தோழர்கள்
பல்துறை அலுவலர் பல்லோ ருண்டிங்கே
மருத்துவ மனையும் நீதிமன் றமுமுண்டு
கருத்து ரைசால் நூல்நிலை யமுண்டு
இன்பம் யாவர்க்கும் என்றே இருந்த
மன்பதை போற்று மரவிந்தன் நிலையம்
நன்ரும் கலைபல கண்டோ ரங்குண்டு
எந்நாளும் ஈந்தே ஆநந்தங் கொண்ட
இந்நாளும் ஏத்தும் ஆநந்த ரங்கன்
புகழுற் றதிங்கே பண்பார் நகரமென்

இரா. நக்கீரன் (காந்திதாஸ்)
ஆசிரியர், புதுவை.

